ISSN 1391-9504

# விஜய் Vijey

03.12.2008 - மலர் 05, இதழ் 39




தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "படிப்பையும், டீ.வி. நிகழ்ச்சித் தொகுப்பையும் ஒன்றாக குழப்பிக் கொள்ளமாட்டேன்"



'சகலகலா குட்டீஸ்' புகழ் ஆரணியுடன் ஒரு சந்திப்பு

**'சக்தி' தொலைக்காட்சியில் சனிக்கிழமை தோறும் காலை 7.30 மணிக்கு ஒளிபரப்பாகும் 'சகலகலா குட்டீஸ்' நிகழ்ச்சி சகலரையும் கவர்ந்த ஒரு நிகழ்ச்சி. இளம் பிள்ளைகள் தமது திறமைகளை வெளிப்படுத்த வழங்கப்பட்டுள்ள ஒரு களம்தான் இந்த நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகின்ற ஆரணி 'சகலகலா குட்டீஸ்' ரசிகர்கள் மத்தியில் மிகவும் அபிமானத்தை வென்றவராவார்.**

**பாடசாலைக்குச் செல்கின்ற ஆரணி தனது கல்விப் பணிகளுடன் இந்த தொலைக்காட்சி நிகழ்ச்சியையும் தொடர்ச்சியாக சிறப்பாக வழங்கி வருகின்றமை பாராட்டுக்குரியதே. எனவே, 'விஜய்' வாசகர்களுக்காக 'சகலகலா குட்டீஸ்' புகழ் ஆரணியுடன் சந்தித்து கலந்துரையாடினோம். அவர் என்ன கூறுகின்றார் என பார்ப்போம்.....**

## "நிகழ்ச்சி உள்ள நாட்களில் அதிகாலை 3 மணிக்கெல்லாம் நித்திரையிலிருந்து எழுந்து விடுவேன்"

**கேள்வி:** ஆரணி! உங்களைப் பற்றிய சில விபரங்களை முதலில் கூறுங்களேன்....

**பதில்:** என்னுடைய முழுப்பெயர் ஆரணி மோகனசுந்தரம். நான் பிறந்தது யாழ்.மீசாலையில். எனக்கு ஒரு தம்பி இருக்கிறார். அம்மா ஓய்வு பெற்ற முன்னாள் ஆசிரியை. தரம் 1 தொடக்கம் 3 வரை தெஹிவளை மீலாத் முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை கற்ற நான் பின்னர் தரம் 4 தொடக்கம் பம்பலப்பிட்டி இராமநாதன் கல்லூரியில் கற்று வருகின்றேன். தற்போது தரம் 5 இல் கற்கின்றேன்.



**கேள்வி:** 'சக்தி'யின் சகலகலா குட்டீஸ் நிகழ்ச்சியில் எவ்வாறு இணைந்தீர்கள்?

**பதில்:** 'குட்டிச்சுட்டி' நிகழ்ச்சிக்கு தொகுப்பாளர் தேவை என்ற விளம்பரத்தைப் பார்த்து ஆர்வத்தில் விண்ணப்பித்திருந்தேன். நேரடிக் குரல் தேர்விற்கு என்னை அழைத்திருந்தனர். அங்கு குரல் தேர்வு, ஸ்கிரீன் டெஸ்ட் நடைபெற்றதுடன் பாட்டுப்பாடி கதை கூறி எனது திறமைகளை வெளிப்படுத்தினேன். அதனையடுத்து 'குட்டிச்சுட்டி' நிகழ்ச்சியில் நித்தியவாணி அக்காவுடன் சேர்ந்து இந்த நிகழ்ச்சியை வழங்குவதற்கு எனக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. இரண்டு வாரங்களின் பின்னர், தனியாக நிகழ்ச்சியை தொகுத்தளிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

**கேள்வி:** நீங்கள் இவ்வாறு நிகழ்ச்சியை தொகுத்து வழங்குவதற்கு பலரும் உதவியிருப்பார்கள் அல்லவா?

**பதில்:** ஆம்! அருணா செல்லத்துரை அங்கிள், ரமணிதரன் அண்ணா, அபர்ணா அக்கா, பிரிந்திரன் அண்ணா, மூர்த்தி அண்ணா, பிரியா அக்கா, எல்ரோய் அண்ணா, ஜீவிதா அக்கா, பிரேம் அண்ணா, இஷாம் அண்ணா மற்றும் கெமராக் கலைஞர்கள், தயாரிப்பாளர்கள் என பலரும் எனக்கு நிறைய ஊக்கத்தையும் உதவிகளையும் வழங்கினார்கள்.



ஆரணி 3 வயதில்....





**கேள்வி:** எத்தனை வருடங்களாக 'சகலகலா குட்டீஸ்' நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குகின்றீர்கள்?

**பதில்:** கடந்த மூன்று வருடங்களாக.....

**கேள்வி:** பாடசாலைக்கு செல்வதுடன், சகலகலா குட்டீஸ் நிகழ்ச்சிக்கும் எப்படி நேரத்தை ஒதுக்கிக் கொள்கின்றீர்கள்?

**பதில்:** குட்டீஸ் நிகழ்ச்சி சனிக்கிழமைகளில் இடம்பெறுவதால், அதிகாலை மூன்று மணிக்கெல்லாம் நித்திரையிலிருந்து எழுந்து ஆயத்தமாகுவேன். காலை 5.15 மணியளவில் சக்தி வேன் வரும். 6 மணிக்கு சக்தியை சென்றடைவோம். என்னுடன் அம்மாவும் துணைக்கு வருவார். 6.30 மணிக்கு 'மேக்அப்' போடப்படும். 7.00 மணிக்கு ஸ்டூடியோவிற்குள் செல்வோம். 7.30 வரை 'வொய்ஸ் பெலன்ஸ்' பார்க்கப்படும். அதனையடுத்து 7.30 மணிக்கு நேரடியாக நிகழ்ச்சி ஆரம்பமாகும்.

**கேள்வி:** வீட்டிலும் உங்களுக்கு உரிய உதவிகள் கிடைக்கின்றனவா?

**பதில்:** ஆமாம்! எனது அம்மாவும் மாமா நவமோகனும் எனக்கு எல்லா விடயத்திலும் பக்கத்துணையாக இருக்கின்றனர். வீட்டில் அம்மா எனது குறைகளை சுட்டிக்காட்டி பயிற்சிகளை வழங்குவார்.



**கேள்வி:** சகலகலா குட்டீஸ் நிகழ்ச்சியில் சின்னஞ்சிறிய தம்பி, தங்கைகள் நிறையப் பேர் கலந்து கொள்ள வருகின்றனர். அவர்களுக்கு கூச்ச சுபாவம், பயந்த சுபாவம் அதிகம் இருக்கலாம். இப்படியானவர்களை எவ்வாறு நீங்கள் சமாளித்து நிகழ்ச்சியை நடத்த முடிகின்றது?

**பதில்:** நானும் அவர்களின் ஒரு நண்பி என்ற எண்ணத்தை அவர்களுக்கு ஏற்படுத்துவேன். நன்றாக அவர்களுடன் சிரித்துப் பேசுவேன். சிலருக்கு டொஃபி போன்ற இனிப்புக்களையும் வழங்குவேன்.

**கேள்வி:** இதேபோன்றதோர் நிலை உங்களுக்கும் நீங்கள் முதன்முதலாக நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் போது ஏற்பட்டிருக்குமல்லவா? அந்த அனுபவம் பற்றி.....?

**பதில்:** எனக்கு இப்போதும் நினைவில் உள்ளது. ஆரம்ப நிகழ்ச்சிகளில் பேசும்போது நான் திக்கித் திக்கியே பேசினேன். அப்போது தயாரிப்பாளர்கள் என்னை உற்சாகப்படுத்தி திருத்தங்களை செய்து பயத்தைப் போக்கினார்கள்.

**வீ.ரெட்லீ ஹெரிசன்**

**கேள்வி:** நிகழ்ச்சித் தொகுப்பில் தவறுகள் விட்டீர்களென்றால் தயாரிப்பாளர் என்ன சொல்வார்?

**பதில்:** சில நேரங்களில் ஒரே கேள்வியை திரும்பத் திரும்பக் கேட்பது தவிர்க்கப்பட வேண்டியதாகும். அந்தத் தவறை நான் செய்ததுண்டு. அப்படியான நாட்களில் பழைய நிகழ்ச்சிகளின் சீ.டீக்களைப் போட்டுக்காட்டுகின்ற தயாரிப்பாளர்கள், அவற்றிலிருந்து 60 கேள்விகளை எழுதிக் காட்டுமாறு கூறுவார்கள். இது எனக்கு நல்லதொரு பயிற்சியாகவும் அமைந்தது.

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல பாடசாலைகளுக்கும் தொலைபேசி வசதிகள்



நாடெங்கிலுமுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் தொலைபேசிகளை இலவசமாக வழங்க கல்வித்துறை அமைச்சர் நிர்மல கொதலாவல நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இதற்காக ஒரு லட்சத்து அறுநூறு மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதிகம் பின்தங்கிய பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றுக்கு முதலிடம் வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வடகிழக்கு, வடமத்திய மாகாண பாடசாலைகளுக்கும், மேல்மாகாண பாடசாலைகளுக்கும் தொலைபேசி வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட உள்ளதோடு, யாழ்ப்பாணத்தில் 50 பாடசாலைகளுக்கும் இந்த வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk



# பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கு புதிய கட்டணம்

பாடசாலை சேவையில் ஈடுபடுகின்ற வாகனக் கட்டணங்களை மாற்றி, புதிய கட்டண விபரங்களை அறிமுகப்படுத்த தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

எரிபொருள் விலை குறைக்கப்பட்டபோதும் பாடசாலை சேவையில் ஈடுபடுகின்ற வாகனங்களின் கட்டணங்கள் இதுவரை குறைக்கப்படவில்லை என்றும் தற்போதும் சில வாகனங்கள் பாடசாலை விடுமுறை காலங்களிலும் முழுக் கட்டணத்தையும் அறவிடுவதாகவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்ற வண்ணமுள்ளன.

எனவே, பாடசாலை சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற வாகனங்களில் தாம் அறிமுகப்படுத்தவுள்ள புதிய கட்டண விபரங்களை காட்சிக்கு வைக்கவேண்டும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். அத்துடன், உத்தேச தேசிய போக்குவரத்துக் கொள்கையில் இது குறித்த யோசனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தவிர, அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்போது பாடசாலை சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற சில வாகனங்களில் மாணவர்கள் அமர்ந்து செல்வதற்கான வசதிகளும் போதாமல் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. எனவே, இந்த திருத்தங்களை விரைவாக மேற்கொள்ளுமாறும் அவர் வாகன உரிமையாளர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# அழிந்து விட்டதாகக் கருதிய உயிரினத்தின் மீள்வருகை



சுமார் எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் அழிந்து விட்டதாக முத்திரை குத்தப்பட்ட அரிய விலங்கினமொன்று இந்தோனேஷியாவிலிருந்து மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேஷியாவின் 'சுலாவெசி' தீவிலுள்ள பனி மூட்டம் நிறைந்த மலையுச்சியில் வைத்தே மேற்படி உயிரினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வுயிரினம் குரங்கு இனம் மற்றும் மனிதன் உள்ளடக்கப்படுகின்ற 'ப்ரைமேட்ஸ்' கோத்திரத்தைச் சார்ந்தது என விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இந்த விலங்கினத்தைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் சுமார் மூன்று மாதங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்ததாகவும் அதன் பலனாக கடந்த மாதம் மூன்று விலங்குகளை கண்டுபிடிப்பதற்கு முடிந்ததாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எலியைப் போன்ற மிகவும் சிறிய உடலமைப்பைக் கொண்ட இந்த உயிரினம் 'பிக்மி டாஸியர்' என அழைக்கப்படுகின்றது. பாலூட்டி விலங்கினத்தைச் சேர்ந்த இது எறும்புகளை உணவாகக் கொள்கின்றது. பிக்மி டாஸியர் விலங்கொன்றின் நிறை 2 அவுன்ஸ் (57 கிராம்) ஆகும். அதற்கு தேவாங்கிற்கு இருப்பது போன்ற பெரிய கண்களும் காதுகளும் உள்ளன. இவற்றின் விரல்கள் நீளமானவை. சிரித்துக் கொண்டிருப்பது போன்ற முக அமைப்பைக் கொண்டிருப்பதோடு, ஆந்தையைப் போன்று தலையை சுழற்றக்கூடியது என இவ்வுயிரினத்தை கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சிக் குழுவுக்குத் தலைமை தாங்கிய விஞ்ஞானியான ஷரோன் கர்ஸ்கி டொயேன் என்பவர் தெரிவித்துள்ளார்.



கண்டுபிடிக்கப்பட்ட இந்த மூன்று விலங்குகளும் செல்லும் இடங்கள் குறித்து அவதானிப்புடன் இருப்பதற்காக, அவற்றின் கழுத்துகளில் சிறிய கண்காணிப்பு கழுத்துப்பட்டிகள் அணிவிக்கப்பட்டு அவை மீண்டும் காட்டுக்கே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அரிய விலங்கினமாக இனங்காணப்பட்டுள்ள இவற்றை 1921 ஆம் ஆண்டிற்குப் பிறகு உலகின் எந்தவொரு பகுதியிலும் கண்டுகொள்ளப்படவில்லை. அதன்பிறகு மீண்டும் 2000 ஆம் ஆண்டில் இந்தோனேஷிய விஞ்ஞானிகள் சிலரால் இவ்வினத்தைச் சார்ந்த ஒரு விலங்கு கண்டுபிடிக்கப்பட்டபோதும் அது விரைவில் இறந்து விட்டது.

-ஜீநு

# விஜய் வழங்கும் அறிவுசார் போட்டி!

உங்கள் திறமைக்கு ஒரு சவால்...

**போட்டி விபரங்கள்**

இந்த இதழிலிருந்து டிசம்பர் மாதம் முழுவதும் வெளிவருகின்ற 'விஜய்' இதழ்களில் பலதரப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்ட பொது அறிவுக் கேள்விகள் ஒவ்வொரு இதழிலும் தலா ஐந்து கேள்விகள் வீதம் வழங்கப்படும். கேள்விகளுக்கு அருகே வழங்கப்பட்டுள்ள விடைகளுள் சரியான விடையின் கீழ் கோடிட வேண்டும். இதன்படி ஐந்து வாரங்களைக் கொண்ட டிசம்பர் மாதத்தில் மொத்தமாக 25 கேள்விகள் கேட்கப்பட்டிருக்கும். இந்த கேள்விகளில் கூடிய அளவில் சரியான விடைகளை அடையாளப்படுத்தியோர் வரிசைப்படுத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.

ஐந்து வாரங்களும் பகுதி பகுதியாக கேள்விகள் வழங்கப்படுகின்றமையால் ஐந்து பகுதிக் கேள்விகளையும் பகுதி - 1, 2, 3, 4, 5 என சேகரித்து அவற்றிற்கான விடைகளை எழுதி அவற்றை ஒட்டு மொத்தமாக எமக்கு தபாலில் அனுப்பவும். தபாலிட வேண்டிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.



**பரிசுகள் ஏராளம்**

| | |
|---|---|
| கல்குலேட்டர்கள் → | 05 |
| விலையுயர்ந்த பேனாக்கள் → | 15 |
| கீடெக்குகள் (Key Tag) → | 15 |

இன்னும் பல ஆறுதல் பரிசுகளும் உண்டு



**இந்த வாரத்திற்கான கேள்விகள் பகுதி - 01**

1. இலங்கையில் வெளியிடப்பட்ட முதலாவது தமிழ் பத்திரிகையின் பெயர் என்ன?
   *(வீரகேசரி, உதய தாரகை, சிந்தாமணி)*
2. சர்வதேச நேரம் என குறிப்பிடப்படும் நேரம்?
   *(கிறீன்வீச், பெல்டைம், விடின்வே)*
3. உலகிலேயே டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரர் யார்?
   *(பிரயன் லாரா, எலன் போடர், சச்சின் டெண்டுல்கர்)*
4. இந்தியாவினால் அண்மையில் விண்வெளிக்கு முதன்முதலாக அனுப்பப்பட்ட ஆளில்லாத விண்கலத்தின் பெயர் என்ன?
   *(சிந்தியா, சந்திரயான்-1, சம்யூரா)*
5. இலங்கையில் இரண்டாவது அனல்மின் நிலையம் நிறுவப்படவுள்ள இடம் எது?
   *(ஹம்பாந்தோட்டை-வீரவில, திருகோணமலை-சம்பூர், கொழும்பு-கொலன்னாவை)*

மிகுதி கேள்விகளை அடுத்தடுத்த இதழ்களில் எதிர்பாருங்கள்.



டிசம்பர் மாத இதழ்களை இன்றே பதிவு செய்யுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "படிப்பையும், டீ.வி. நிகழ்ச்சித் தொகுப்பையும் ஒன்றாக குழப்பிக் கொள்ளமாட்டேன்"

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கேள்வி:** நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வருகின்ற தம்பி, தங்கைகள் நிறையத் திறமைகளை வெளிக் காட்டும்போது எப்படி உணர்வீர்கள்?

**பதில்:** மகிழ்ச்சியாக இருக்கும். நிறையத் தம்பி, தங்கைகள் நிகழ்ச் சிக்குக் கொண்டு வருகின்ற அவர்களின் ஆக்கங்களை எனது வீட்டில் சுவர் பூரா வும் ஒட்டி வைத்துள்ளேன். அந்தளவிற்கு அவற்றை நான் ரசிப்பதுண்டு.



**கேள்வி:** இவை மட்டு மன்றி உங்களிடம் இன்னும் வெவ்வேறு திறமைகள் இருப் பதையும் அறிவோம். 'விழி' என்ற குறுந்திரைப்பட மொன்றிலும் நடித்தீர்கள் அல்லவா?



**பதில்:** ஆம்! இயக்குனர் செல்வம் அண்ணா அவர்கள்தான் என்னை 'விழி' என்ற இந்த குறுந்திரைப் படத்தில் அறிமுகப் படுத்தினார். 'சகலகலா குட்டீஸ்' நிகழ்ச்சியில் என்னைப் பார்த்து விட்டுத்தான் அவரு டைய படத்தில் எனக்கு வாய்ப்புக் கொடுத்தார். இந்தத் திரைப்படம் உலகம் பூராவும் திரையிடப் பட்டது. அத்தோடு நான் பாடல், நடனம் ஆகியவற்றிலும் ஈடுபாடு கொண்டுள்ளேன்.

**கேள்வி:** இந்த திறமைகளை எப்படி வெளிப்படுத்தி வருகின்றீர் கள்?

**பதில்:** நான் பண்ணிசை வகுப்பிற் குச் செல்கின்றேன். கொழும்பு மயூராபதி அம்மன் ஆலயத்தில் தேவாரம் பாடியும் வருகின்றேன். ஆலய தர்மகர்த்தாவான வல்லிபுரம் ஐயா அவர்கள் இதில் எனக்கு நிறைய உதவிகளைச் செய்கின்றார்.

**கேள்வி:** நடனம் எந்தளவிற்குக் கற்றுள்ளீர்கள்?

## "பண்ணிசை வகுப்பிற்கு செல்வதுடன் நடனமும் பயின்று வருகின்றேன்"

**பதில்:** 'அபிநய சேஷ்தரா' நடனப் பள்ளியின் ஆசிரியை திவ்யா சிவநேசம் அவர்களிடம் முறைப்படி நடனம் பயின்று வருகின்றேன். இவரது நடனப் பள்ளியில் சேர்ந்த முதல் மாணவி நானே என்பதும் எனக்கு பெருமைதான்.

**கேள்வி:** அப்படியென்றால் உங்களது எதிர்கால லட்சியம் என்று எதைக் கருது கின்றீர்கள்?

**பதில்:** நான் ஒரு வைத்தியராக வர வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

**கேள்வி:** நீங்கள் கல்வி கற்கும் பாடசாலை ஆசிரியர்கள், சகமாணவிகள் உங்களுடன் எப்படி பழகுகின்றார்கள்?

**பதில்:** எனது வகுப்பு ஆசிரியை திருமதி.ராஜரட்ணம் அவர்கள் என்னை நன்றாக ஊக்குவிக்கின்றார். சகமாணவர் கள் என்னிடம் டீ.வி நிகழ்ச்சி பற்றி நிறையப் பேசுவதற்கு விரும்புவார்கள். அவர்களுடைய ஆர்வத்தையிட்டு எனக்கு மகிழ்ச்சி தான். ஆனால், பாடசாலையில் படிப்புடன் டீ.வி நிகழ்ச்சியை குழப்பிக் கொள்ள எனக்கு விருப்பமில்லை.

### வகுப்பு ஆசிரியையிடம் அடிவாங்கி அழுத அனுபவமும் உண்டு

**கேள்வி:** எந் தெந்தப் பாடங்கள் உங்களுக்கு மிகவும் பிடித்தமானவை?

**பதில்:** தமிழ், சுற்றாடல் ஆகிய பாடங்கள். அத்துடன், இம்முறை புலமைப்பரிசில் பரீட்சையிலும் சித்திய டைந்துள்ளேன்.

**கேள்வி:** பாடசாலையில் அடி வாங்கியதுண்டா?

**பதில்:** ஆம்! ஒருநாள் பாடசாலை யில் வகுப்பு நேரத்தில் என்னுடைய சக மாணவி ஒருவர் பசிப்பதாக கூறிய தால் என்னிடம் இருந்த 'டோநட்ஸ்' ஜோடியை அவருக்கு சாப்பிடக் கொடுத்தேன். இதனை டீச்சர் கண்டு விட்டார். பாடநேரத்தில் இப்படி நடந்து கொண்டதற்காக டீச்சரிடம் அடி வாங்கினேன். அழுதும் விட்டேன்.

**கேள்வி:** உங்களுடைய வழமை யான பொழுதுபோக்குகளை சொல் லுங்களேன்?

**பதில்:** செவ்வாய், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் ஓய்வு இருக் கும். அப்போது நண்பிகளைச் சந்திக் கச் செல்வேன். தம்பியோடு விளை யாடுவேன், டீ.வி பார்ப்பேன்.

**கேள்வி:** சக்தி டீ.வியில் 'சகலகலா குட்டீஸ்' மூலம் பிரபல்யம் பெற்றுள்ள தையிட்டு என்ன நினைக்கின்றீர்கள்?

**பதில்:** அதற்காக 'சக்தி' நிறுவனத் திற்கு நான் நன்றி கூறுகின்றேன். அதனை எப்போதும் மறக்கமாட்டேன். எனக்கு இந்த சிறு வயதிலேயே ஒரு திருப்புமுனையை சக்தி டீ.வி ஏற்படுத் தியுள்ளது. இந்த நிகழ்ச்சியின் மூலம் நிறையத் தம்பி, தங்கைகள் எனக்கு நண்பர்களாக கிடைத்துள்ளனர். அதற் காக மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.




**கேள்வி:** தம்பி, தங்கைமாருக்கு நீங்கள் கூறவுள்ள ஆலோசனை என்ன?

**பதில்:** கல்வி அறிவை மட்டுமல்ல, எதிலும் தற்துணிவை வளர்த்துக் கொள் ளுங்கள். அத்துடன், பிறருக்கு உதவி செய்யும் பழக்கத்தையும் வளர்த்துக் கொள்ளுங்கள் என்று கூற விரும்புகின் றேன்.

**கேள்வி:** உங்களுடைய வீட்டு முகவரியை வழங்கலாமே....

**பதில்:** எம்.ஆரணி,
இல 19/1, விஜேபா மாவத்தை,
களுபோவில,
தெஹிவளை.

# காட்டுக் கோழி



விஞ்ஞானப் பெயர்: *Gallus lafayetiu*
**Srilankan Junglefowl**

எமது நாட்டின் வனாந்தரங்களில் காணப்படும் காட்டுக்கோழி இந்தியா வின் சிவப்புக் காட்டுக்கோழி - இனத்தை ஒத்ததாக காணப்படுவதால் அதன் நெருக்கமான உறவுக்காரர் என்று கருதப்படுகின்றது.

சாதாரணமாக 70 சென்ரிமீற்றர் அள விலான இக்காட்டுக்கோழியின் பெண் (பேடு)இனம் 35 சென்றிமீற்றர் அளவா கவே காணப்படுகின்றது. ஆணைவிட பெண் சற்று சிறிதாக இருக்கின்றது.

இவை வேகமாக ஓடக்கூடியதாகவும் பலமான ஒலி எழுப்பக்கூடியதாகவும் இருக்கின்றன. சிவப்பு, இளம் மஞ்சள், ஊதா நிறங்கள் கலந்த கண்கவர் வர்ணத்தில் அழகாக காட்சி தருகின் றன. இரவு நேரத்தில் காட்டுக்கோழிகள் மரங்களிலேயே தங்குகின்றன.

தானிய வகைகள், கீழே விழும் பழங் கள் மற்றும் சிறிய பூச்சி புழுக்கள் என்பன காட்டுக்கோழிகளின் பிரதான உணவு வகைகளாகும். வருடத்தின் ஆரம்பத்தில் இவை இனப்பெருக்கச் செயற்பாட்டில் ஈடுபடுவதோடு பேட்டுக் கோழி காய்ந்த இலைகள் சருகுகளை ஒன்று சேர்த்து முட்டை இடும். முட்டை 48x35 மில்லி மீற்றர் அளவாக வெள்ளை நிறத்தில் கறுப்புப் புள்ளிகள் கொண்டதாக காணப்படும்.

ஒருமுறைக்கு 2-4 முட்டை கள் வரை இடும். எப்போதும் இவை ஆண் தனியாகவும் பெண் வேறாகவும் உலாவும். குஞ்சுகளும் வெளிவந்து இரண்டு மூன்று நாட்களில் தனியாக செயல்பட பழகிக் கொள்கின்றன.

எமது நாட்டின் தேசிய பற வையான இக்காட்டுக் கோழி களுக்கு வேட்டைக்காரர் களால் அச்சுறுத்தல் ஏற்பட்டி ருக்கின்றது. அதனால், அருகி வரும் ஒரு பறவை இனமாக காட்டுக்கோழிகள் கருதப்படு கின்றன.

**அமீர் ஹுசைன்**

# 4,000 ஆண்டு பழைமை மிக்க பிரமிட் தோண்டி எடுப்பு

சுமார் 4,000 ஆண்டுகளுக்கு மேல் பழைமைமிக்க புராதன காலத்து 'பிரமிட்' ஒன்று தோண்டி எடுக்கப்பட் டுள்ளதாக எகிப்திலுள்ள தொல்பொருள் ஆய்வாளர்கள் தெரிவித்துள் ளனர்.



அவர்கள் இந்த வியப்புக் குரிய கண்டு பிடிப்பை தலைநகர் கெய்ரோவுக்கு தெற்கேயுள்ள சக்காரா என்னுமிடத்தில் நடத்தியிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். மேற்படி, பகுதி புராதன எகிப்தின் ஆட்சியாளர்களின் பிரபல அடக்கஸ்தலம் என்பதும் ஏற்கனவே தெரிந்த விடயமாகும். இது எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்ட 118 ஆவது 'பிரமிட்' என்பதோடு டேட்டி என்னும் அரசனின் தாயாரான செஸேசெட் அரசியுடையது என நம்பப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பிரமிட்டி லிருந்து மிகுதி யாகக் கிடைக்கப் பட்ட சிதைவு களை வைத்துப் பார்க்கையில் இது ஐந்து மீற்றர் உயரத்தில் சதுர வடிவில் உள் ளது. எனினும், எகிப்தின் சிறந்த தொல்பொருள் ஆய் வாளரான ஷாஹி ஹவாஸ் தெரிவிக்கையில் இப்பொ ழுது காணப்படும் உயரத்தை போல் மூன்று மடங்கு உயர மாக இது இருந்திருக்கு மென்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்தங்களிலிருந்து காத்திடும் விண் இல்லம்

பெரும் சிரமங்களுக்கு மத்தியில் கட்டி முடிக்கப்பட்ட இல்லம் பூமியதிர்ச்சி, புயல், மண்சரிவு, சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படும்பொழுது நாம் படும் மனத்துயரங்களை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. இயற்கைச் சீற்றங்கள் மனிதனுடைய உடைமைகளை காவு கொண்டு போனாலும் மனிதனுடைய தன்னம்பிக்கையும் விடா முயற்சியும் அழிந்துவிடுவதே இல்லை. அதற்கேற்ப அனர்த்தங்கள் வரும்போது தன்னைத் தற்காத்துக் கொள்ளவும் மாற்றி அமைக்கவும் விஞ்ஞானத்தில் வழி இருக்கின்றது என்பதை நாளுக்கு நாள் நிரூபித்து வருகிறார்கள் விஞ்ஞானிகள்.

இந்த வகையில், இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்கும் வகையிலான வீடுகளை ஐரோப்பிய விண்வெளி மையம் வடிவமைத்திருக்கிறது.

அண்டார்ட்டிக்காவின் கடுமையான குளிர் காலநிலைக்கு ஈடுகொடுப்பதற்கு ஏற்ப, விண்வெளி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விண் இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இது எதிர்கால சந்ததியினருக்கு ஒரு வரப்பிரசாதமாகவே இருக்கும்.

இயற்கைச் சீற்றங்களை நிறுத்த எம்மால் முடியாது. அதனால், நாம் தான் அதற்கேற்றவாறு சூழ்நிலைகளை மாற்றிக்கொண்டு வாழவேண்டும் என்ற யதார்த்தபூர்வமான கருத்துக்கமைய இந்த விண் இல்லங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.









## விண் இல்லங்களின் வடிவமைப்பு

ஐரோப்பிய விண்வெளி மையம் (European Space Agency) இந்த விண்வெளி இல்லங்களை வடிவமைத்துள்ளது. ஜேர்மனியின் தொழில்நுட்பத்துடன் அண்டார்டிக்காவின் காலநிலையை தாங்கிக் கொள்ளும் வகையில் ஏற்படுத்தப்பட்ட கடுமையான சட்ட விதிகளுக்குட்பட்டு, வடிவமைக்கப்பட்ட நியூமேயர் III (Neumayer III) இப்பொழுது விண்வெளி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அதற்கேற்றவாறு கட்டப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டில் துருவ மற்றும் கடல் ஆய்வினை மேற்கொள்ளும் 'அல்பிரட் விஜினர்' கழகமும் ஜேர்மன்-அண்டார்டிக்கா நிலையமும் விண் இல்லத்தை வடிவமைக்கும் ஆரம்பத் திட்டத்தை கண்டறிந்ததுடன், ஐரோப்பிய விண்வெளி மையத்துடன் இணைந்து இதனை உருவாக்குவதற்குத் திட்டமிட்டன. 2007 ஆம் ஆண்டில் நடைபெற்ற அண்டார்ட்டிக்கா ஆராய்ச்சி விஞ்ஞானக் குழுவின் (Scientific Commitee On Antarctic Researce) 28 ஆவது மாநாட்டில் இத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த விண் இல்லங்களில் தானாகத் தாங்கி நிற்கக்கூடிய அமைப்பு, அன்டெனா, சூரிய ஒளிச்சட்டங்கள் என்பனவற்றின் வடிவமைப்புக்காக, செயற்கைக் கோள்கள் மற்றும் விண்கலங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்ற புறஒளி (Ultra Lights) கலவைகளினாலான அதாவது காபன் இழைகளால் உறுதி செய்யப்பட்ட பிளாஸ்டிக்குகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. இவற்றின் மேலோடு ஆனது நிறை குறைவாக தானாக தாங்கி நிற்கக்கூடிய நிலையில் இருப்பதால், இந்த விண் இல்லங்கள் கடுமையான நிலநடுக்கத்தையும் தாங்கி நிற்கக்கூடியன.

## ஈடுகொடுக்கும் இயல்பு

விண் இல்லப் பொறியியலாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்கள் அதன் வடிவத்தைக் கோளங்களைப் போன்றும் உறுதியாக நிற்கக்கூடிய வகையிலும் அமைத்திருக்கின்றார்கள். விண் இல்லங்களைத் தாங்கி நிற்கும் கால்கள் பூமியில் எந்தவொரு அதிர்ச்சியையோ அல்லது அதிர்வுகளையோ அல்லது அசைவுகளையோ தாங்கக்கூடிய வகையில் புவியின் மேற்பரப்பில் ஊர்ந்து செல்வது போல் இருக்கின்றன. தற்பொழுது உள்ள விண் இல்லங்கள் ஏழு ரிச்டர் அளவு வரையிலான பூகம்பத்தைத் தாங்கக்கூடிய வகையிலும் மணிக்கு 220 கிலோமீற்றரில் வீசக்கூடிய பலமான காற்றின் வேகத்தை தாங்கக்கூடியதாகவும் மூன்று மீற்றர் உயரத்திற்கு வெள்ளப்பெருக்கு வந்தால் அதனையும் தாங்கக்கூடியதாகவும் உள்ளன.

இதிலுள்ள மற்றொரு முக்கிய அம்சம் என்னவெனில், இந்த விண் இல்லங்கள் சுயமாக இயங்கும் தன்மையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. சூரிய ஒளி மூலம் சக்தி மிகுந்த மின்சாரம் பெறப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. மேலும், அதி நவீன தொழில்நுட்பங்கள் மூலம் தேவைப்படும் தண்ணீர், மீள் சுழற்சி (Recycling) முறையில் சுத்தம் செய்யப்படுகிறது. இதில் காற்றில் உள்ள கிருமிகளை அகற்றும் நவீன கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

அண்டார்ட்டிக்கா சுற்றுப் புறச் சூழ்நிலைகளுக்குத் தகுந்தவாறு எந்தவித கடினமான காலநிலைகளைத் தாங்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதனால், எவ்வித மாசுபடுதலுக்கும் உட்படுவதில்லை. நிறை குறைவான இந்த விண் இல்லங்கள் மிகக் கடுமையான பனிப்பொழிவு அதாவது படிவு வீழ்ச்சியினாலும் பாதிக்கப்படாத முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

ஐரோப்பியக் கட்டட மேம்பாட்டுச் சந்தையில் இந்த விண் இல்லங்கள் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன. விண் இல்லங்கள் இயற்கைச் சீற்றங்களை சமாளிக்கும் விதத்தில், அதிநவீன தொழில்நுட்பங்களுடன் புவியில் வாழ்வதற்கு ஏற்ற விதத்தில் இருக்கும் என்பது உண்மை. உதாரணமாக; விண் இல்லங்களுக்கு தீயை தாங்கக்கூடிய (Fire Proof) உலோக முலாம் பூசப்பட்ட 'பொலிமர்' என்ற பிளாஸ்டிக் உபயோகப்படுத்தப்படுவதால் மின்னல் தாக்குதல்களிலிருந்து அவை பாதுகாப்புப் பெறுகின்றன என தெரிவித்தார். ஆக பலவழிகளிலும் பாதுகாப்பானதாக இந்த விண் இல்லங்களை நாம் கருதலாம்.

**ப.இரஞ்சித் ஜெயகர்**

60 நாட்களில் தபால் மூல ஆங்கில பாடநெறி
இலகுவாக ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் சிறந்த வழிகாட்டி
English Language யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.
BASIC/SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH
அடிப்படையில் இருந்த தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.
60 நாட்களின் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் ஒன்றும்
FREE FREE இலவசம் இலவசம் பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
* இலவச 30 days Easy Way English Book Part1
Easy Way English
இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
பாடநெறியில் இணைய வயது கட்டுபாடோ, ஆங்கில முன் அறிவோ தேவையில்லை. பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர், தொழில் வாய்ப்பு எதிர்பார்க்கும், இல்லத்தரசிகள் என யாவருக்கும் இணைய முடியும்.
மேலதிக விபரங்களுக்கு 10/- பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-5615561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனம் இது சூறா





**"அநியாயம்! ஏன் அப்பா பலா மரத்தின் கிளைகளை வெட்டினீர்கள்?"**

**"அந்தக் கிளைகள் வீட்டின் கூரையில் சரிந்து கொண்டல்லவா இருந்தன மகனே. பலத்த காற்று எதுவும் வீசினால் கூரையில் விழுந்துவிடும் அல்லவா"**

**"பலத்த காற்று, சூறாவளி எதுவும் வரப்போகின்றதா அப்பா"**

**"இல்லை மகனே, இலங்கையில் பலத்த காற்று, சூறாவளி வீசும் காலமாக நவம்பர், டிசம்பர் காலப்பகுதி காணப்படுகின்றது. அனர்த்தம் எதுவும் நிகழ்வதற்கு முன்னர் அதிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதே புத்திசாலித்தனம்"**

## சூறாவளி என்றால் என்ன?

வெப்பநிலை அதிகரிப்பினால் வளியில் தாழமுக்க நிலை ஏற்படுவதனையே பலத்த காற்று மற்றும் சூறாவளி என்று குறிப்பிடலாம். சூறாவளி ஏற்படும் போது அதன் கேந்திரப் பகுதியிலிருந்து 100 கி.மீ தூரம் வரையில் பயணிக்கக்கூடிய பலமான காற்று நிலையை அவதானிக்க முடியும்.

அனேகமாக, வெப்பவலயப் பகுதிகளில்தான் பலத்த காற்று நிலை உருவாகும். இந்து சமுத்திரப் பகுதியில் உருவாகும் காற்றமுத்த நிலையை Cyclone என்ற பெயரிலும், பசுபிக் வலயத்தில் உருவாகும் காற்றமுத்த நிலையினை Typhoon என்ற பெயரிலும், அத்திலாந்திக் சமுத்திரப் பகுதியில் உருவாகும் காற்றமுத்த நிலையினை Harricane என்ற பெயரிலும் அழைப்பர். இதில் மிகவும் தீவிரமானதும் பேரழிவினை ஏற்படுத்தக் கூடியதுமாக Cyclone காணப்படுகின்றது.

## சூறாவளியின் கட்டமைப்பு

பலமாக உருவாகும் காற்றமுத்த நிலையின் மையப்பகுதி 'கண்கள்' என்று குறிப்பிடப்படுகின்றது. முகில்கள் அற்ற மழையற்ற மிதமான காற்றுக் கொண்ட பகுதியாகவே அதன் மையப் பகுதி காணப்படும். செய்மதிப் புகைப் படங்களில் பார்க்கும்போது அது கறுப்புப் புள்ளி போன்று தென்படும்.

மையப்பகுதியினை சூழ வளையங்கள் காணப்படும். இந்த பகுதியில் பலத்த காற்றும் பலத்த மழை வீழ்ச்சியும் காணப்படும். வளையங்களுக்குப் புறமான பகுதியிலும் பல சுற்றுக்கோட்டுப் பகுதிகளிலும் பலத்த காற்று நிலையும் மழைவீழ்ச்சியும் காணப்படும்.

## சூறாவளி உருவாகும் விதம்

வெப்ப வலயமாகக் கருதப்படும் சமுத்திரத்தின் உட்பகுதியிலும் வெளிப் பகுதியிலும் வெப்பநிலை அதிகரிக்கும் போது அதன் சுற்றுப்பகுதியில் காற்று மண்டலம் வெப்பமேறி காற்றின் கூறுகள் மேல் நகர ஆரம்பிக்கும். இதனால், காற்று மண்டலத்தின் அமுத்த நிலை குறைவடைந்து குறை அமுத்தப் பகுதி ஒன்றும் உருவாகும். இதன்போது, சுற்றுப்புறத்தில் உள்ள வளிக்கூறுகள் இந்த அமுத்தம் குறைந்த பகுதியினை நோக்கி ஈர்க்கப்படும். மென்மேலும் அமுத்தம் குறைவடையும்போது தீவிர அமுத்தம் கொண்ட பகுதியாக அப் பகுதி மாறும். இந்த அமுத்தப் பகுதியினை நோக்கிக் காற்று நேர் கோட்டில் பயணிக்காமல் சுழன்று சுழன்றே பயணிக்கும். அதன்போது, பலத்த காற்றுக் கொண்ட 'சூறாவளி' ஏற்படும் சூழல் உருவாகும்.



சூறாவளி உருவாகும் விதம்

## ஆபத்துக்கு முன்னரான தயார் நிலை

* வீட்டின் கூரைகளும் சுவர்களும் பலமாக இருக்கின்றதா என்பதனை நன்கு அவதானியுங்கள். அவ்வாறு இல்லாவிட்டால், குறைகளை நிவர்த்தி செய்து கொள்ள முயலுங்கள்.
* வீடுகளுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும் மரங்களின் உயரமான கிளைகளை வெட்டி விடுங்கள்.
* பலத்த காற்று வீசும்போது உடலைத் தாக்கிக் காயங்களை ஏற்படுத்தும் உபகரணங்கள், பொருட்கள் ஏதும் இருப்பின் அவற்றைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்தி விடுங்கள்.
* கடல் கொந்தளிப்பு, பலத்த புயல், வெள்ளப்பெருக்கு என்பன ஏற்படின் அவற்றிலிருந்து தப்பிக்க உயரமான இடங்களை அறிந்து வைத்திருங்கள். அவ்வாறான பகுதிகளுக்கு செல்லும் வழிகளையும் அறிந்து வைத்திருங்கள்.
* அவசர நிலைமையின்போது பயன்படுத்திக் கொள்ள பின்வரும் பொருட்களை தயாராக வைத்திருங்கள்.
  * குடிநீர்ப் போத்தல்கள்
  * முதலுதவிப் பொருட்கள்
  * உலர் உணவுப் பொருட்கள்
  * போர்வைகள்
  * மின்கலத்தில் இயங்கும் வானொலி
  * மின்விளக்கு மற்றும் மின்கலன்கள்
  * தீப்பெட்டி மற்றும் லாந்தர்விளக்கு

## நீங்கள் பாதுகாப்பாக இருக்கின்றீர்களா?

* உடைகள், முக்கிய ஆவணங்கள் என்பனவற்றை 'பொலித்தீன்'பைகளில் இட்டு உயரமான இடங்களில் வைத்து விடுங்கள்.
* மீன்பிடிப் படகுகளை பலமாக நங்கூரம் இட்டு நிறுத்தி வையுங்கள். மீன்பிடி உபகரணங்களை உயரமான இடங்களுக்கு எடுத்துச் செல்லுங்கள்.
* பாதுகாப்பற்ற பிரதேசங்களில் இருக்கின்றீர்களாயின் முதலில் மிகவும் பாதுகாப்பான இடத்திற்கு சென்று விடுங்கள்.
* அபாய அறிவிப்புகள் மற்றும் நிலைமைகளை அறிந்து கொள்ள நித்தம் மின் கலத்தில் இயங்கும் வானொலியை செவிமடுங்கள்.
* வீடுகளிலிருந்து வெளியேறும் போது மின் விநியோகத்தினை துண்டித்து விடுங்கள்.
* ஆடுகள், மாடுகள் ஆகிய விலங்குகளின் கட்டுக்களை அவிழ்த்து விட்டு அவற்றை சுதந்திரமாக நடமாட விடுங்கள்.



சூறாவளியின் பாதிப்பினைக் குறைத்துக் கொள்வோம்

## சூறாவளி வீசும்போது......

* வீடுகளில் அல்லது பாதுகாப்பான இடங்களில் இருங்கள்.
* கொன்கிறீட் கூரை கொண்ட இடத்தினை நோக்கிச் செல்லுங்கள்.
* காற்று வீசும் தன்மை குறைந்தவுடன் புயல் அடங்கி விட்டதாகக் கருதாதீர்கள். வேறு திசையிலிருந்து பலத்த காற்று வீசக்கூடும். காற்றின் வேகம் குறைந்து விட்டதாக அறிவிக்கும் வரை பொறுமையாக இருங்கள்.

## சூறாவளி பெரும் அனர்த்தம்

சூறாவளி பெரும் அனர்த்தமாவதற்கு முக்கிய காரணங்கள்.

* பெரும் மழை
* மின்னல்
* கடும் காற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளி வீசும் காலம்



* வெள்ளப்பெருக்கு
* மண்சரிவு
* கடற்கரைப்பகுதிகளில் கடல் அரிப்பு
* சொத்துக்களுக்குப் பாதிப்பு
* தொற்று நோய்கள் பரவும் அபாயம்

## சூறாவளியின் அனர்த்தத்திற்கு உள்ளாவது யார்?

* பாதுகாப்பற்ற கட்டடங்கள் மற்றும் குடிசைகளில் வசிப்போர்.
* கடற்கரை மற்றும் ஆற்றோரங்களில் வசிக்கும் மக்கள்.
* மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருப்போர்.
* வெட்டவெளியான பகுதிகளில் அல்லது மரங்களின் கீழ் நிற்போர்.
* பெருந்தெருக்களில் பயணித்துக் கொண்டிருப்பவர்கள்.

## சூறாவளியின் பின்னர்

* பாதுகாப்பான நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அறிவிக்கும் வரையில் பாதுகாப்பான இடத்தில் தரித்து இருங்கள்.
* ஈரமாக்கப்பட்ட மின் உபகரணங்களைப் பாவிப்பதனை தவிர்த்து விடுங்கள்.
* அபாய அறிவிப்புகள், பாதிப்புகள், உதவிகள் என்பன பற்றித்தெரிந்து கொள்ள வானொலியை செவிமடுங்கள்.
* அனர்த்தத்திற்குள்ளானவர்களுக்கு உணவுகள், கூடாரங்கள், சுகாதார சேவைகளைப் பெற்றுக் கொடுங்கள்.
* பாதிக்கப்பட்டுள்ள மின் கம்பங்கள், பாலங்கள் என்பன குறித்து அவதானம் கொள்ளுங்கள்.
* அசுத்தமான நீரைக் குடிப்பதனைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
* உரிய இரசாயனத்தினைப் பயன்படுத்தி கிணற்றைச் சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள்.
* பாதிக்கப்பட்ட கட்டடங்களை மீண்டும் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுங்கள்.

## சூறாவளி பற்றி அறிந்து கொள்ளுங்கள்

சூறாவளியின் தன்மை உங்களை ஏமாற்றக்கூடும். கடும் காற்றின் பின்னர் ஏற்படும் மழை முகில்கள் அற்ற மெல்லிய காற்று நிலை தற்காலிகமானதாகும். சில மணி நேரங்களின் பின்னர் எதிர்த்திசையில் இருந்து கடும் காற்றும் மழையும் ஏற்பட்டு உங்களைத் தாக்கக் கூடும். இதனால், சூறாவளிப் பகுதியினை நோக்கிப் பயணிப்பது உங்களுக்கு ஆபத்தானதாக அமையக்கூடும்.

## சூறாவளி ஏற்படப் போகின்றதாயின்....

சூறாவளி ஏற்படுவதனை வெளிப்படுத்தும் பல காரணிகள் உள்ளன.

* கடல் வெளிப்பகுதி வெப்பநிலை கடல் மேற்பகுதியிலிருந்து 60 மீற்றர் ஆழப்பகுதி வரை 26.5 பாகை செல்சியஸுக்கு அதிகமாக இருக்க வேண்டும்.
* சூறாவளி உருவாகும் பிரதேசம் கணிப்பீட்டு ரேகைக்கு 3 பாகை வடக்கு நோக்கி அல்லது தெற்கு நோக்கி இருக்க வேண்டும்.

தரைப்பகுதியிலிருந்து 7-8 கி.மீற்றர் வரை காற்று மண்டலத்தின் அழுத்தமானது 60 சதவீதத்திற்கு அதிகமாக இருக்கும்போது சூறாவளி ஏற்படக்கூடும்.

## சூறாவளியின் தன்மைகள்

| நிலைமை | அதிகபட்ச காற்றின் வேகம் மணி கி.மீற்றர் | பாதிப்புகள் |
|---|---|---|
| குறை அழுத்தப் பகுதி | 35 க்கு குறைவான வேகம் | வீடுகளுக்குப் பாதிப்பில்லை. பயிர்களுக்கும் தாவரங்களுக்கும் பாதிப்பு. |
| குறைந்தளவு அழுத்தம் | 36–65 | சிறியளவில் வீடுகளுக்கு பாதிப்பு. தாவரங்களுக்கும் ஓரளவு பாதிப்பு. பயிர்களுக்கு குறிப்பிடத்தக்க பாதிப்பு. |
| காற்றுப் புயல் | 65–125 | வீடுகளுக்கு ஓரளவு பாதிப்பு. மின் விநியோகங்களுக்குப் பாதிப்பு. |
| சூறாவளி | 124 க்கு அதிகம் | வீடுகளுக்கு பலத்த பாதிப்பு. மின் விநியோகங்களுக்கும் பலத்த பாதிப்பு. |

## உலகில் சூறாவளி ஏற்படும் பிரதேசங்கள்




## உங்களுக்குத் தெரியுமா?

இலங்கையில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்திய சுனாமி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கைப் பாதிப்புகளினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களும் சிறுவர்களும் வயோதிபர்களும் நோயாளிகளும் அங்கவீனர்களுமாவர். இவர்களில் பெரும்பாலும் சிறுவர் சிறுமியரே பெரிதும் பாதிப்புக்குள்ளாகினர். அதனால், பாடசாலை மாணவ மாணவியரான நீங்களும் அனர்த்த முகாமைத்துவம் பற்றி அறிந்து கொள்ளும், அனர்த்தங்களிலிருந்து விலகியிருக்கும் பொறுப்பும் உரிமையும் கொண்டவர்களாக இருக்கின்றீர்கள்.


## சூறாவளி எம்மைப் பாதிப்பது இப்படித்தான்

இலங்கை சூறாவளி வலயத்திற்கு அப்பால் இருப்பதனால் எமக்கு சூறாவளியின் அபாயம் இல்லை. எனினும், பருவ மழைக்காலத்தில் சூறாவளி நிலை தோன்றலாம். 1861 முதல் 2001 வரையிலான காலப்பகுதியில் பதினொரு தடவைகள் சூறாவளியும், ஐந்து தடவைகள் சிறிய புயல் நிலைமையும் ஏற்பட்டன. 1907 மார்ச், 1922 நவம்பர், 1964 டிசம்பர், 1978 நவம்பர், 2000 டிசம்பர் ஆகிய காலப் பகுதிகளை எடுத்து நோக்கினால் சூறாவளி அபாயம் வருட இறுதிப் பகுதிகளிலேயே அதிகம் காணப்படுகின்றது என்பதனை அறியக் கூடியதாக இருக்கின்றது. எனினும், இலங்கையில் சூறாவளி நிலைமை ஏற்பட்டால் கிழக்குப் பகுதியே அதிகமாக பாதிக்கப்படும் சூழ்நிலை காணப்படுகிறது.

எமது நாடு சூறாவளியின் தாக்கத்துக்கு அடிக்கடி உள்ளாகாமல் விட்டாலும், வங்காள விரிகுடாவில் ஏற்படும் மாற்றங்கள் எம்மை ஓரளவுக்கு பாதிக்கின்றன. அதனால், காலநிலை மாற்றங்கள் குறித்து அவதானமாக இருப்பது அனர்த்தத்திலிருந்து விடுபட உதவும்.

## அபாயம் குறித்து அறிவிப்போர்

தொலைக்காட்சி மற்றும் வானொலிகளில் சூறாவளி குறித்து அபாய அறிவிப்பு விடுக்கப்படுகின்றது. எமது நாட்டின் வானிலை அவதான நிலையம் நாள் முழுவதும் சேவையில் ஈடுபட்டு வருகின்றது. சூறாவளி அபாயம் தோன்றும் பட்சத்தில் அது பற்றி அறிவிக்க நவீன தொழில்நுட்ப மற்றும் செய்மதி தொடர்புக்கருவிகள் திணைக்களம் வசம் உள்ளன. நீங்கள் அறிவிப்புகள் குறித்து அவதானத்துடன் இருப்பதும் அனர்த்தத்திற்கு முன் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதும் சிறந்ததாகும். அபாய நிலைமைகளின் போது முன் எச்சரிக்கை அறிவிப்பு நிலையத்தின் 011-2686686 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகளை ஏற்படுத்தலாம்.






விசேட அனுசரணை:
PRACTICAL ACTION
Intermediate Technology Development Group
ப்றக்டிக்கல் எக்சன்
இல. 5, லயனல் எதிரிசிங்க மாவத்தை கொழும்பு-5.
தொலைபேசி: 011 2829412 பெக்ஸ்: 011 2856188
மின்னஞ்சல்: Sri Lanka@practicalaction.org.lk
இணையதளம்: www.janathakshan.net
www.practicalaction.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலை இரத்தம் அம்பலப்படுத்தும் ரகசியம்

**நீரிலும் நிலத்திலும் வாழும் ஆற்றல் உள்ள முதலைகள் எந்தவொரு உயிரினத்தையும் எதிர்த்துப் போராடும் ஆற்றல் பெற்றவையாகும். முதலை ஏனைய உயிரினங்களுடன் போராடும் சந்தர்ப்பங்களை விட, தனது இனத்தோடு சண்டை போடுவது அதிகம் என்று முதலைகள் பற்றி ஆராய்ந்த ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.**



சண்டையின்போது முதலைக்கு கடுமையான காயம் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனால், அந்தக் காயம் விரைவில் குணமாகி விடுவதுதான் புரியாத புதிராக இருந்தது. அண்மைய ஆய்வொன்றின் படி, முதலையின் இரத்தத்தில் இருக்கும் ஒருவகையான ரசாயனப் பதார்த்தம் காரணமாக முதலைக்கு ஏற்படும் காயம் விரைவில் குணமடையக் காரணமாகின்றது என்ற விடயம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஆய்வினை



வெற்றிகரமாக மேற்கொண்டதற்கிணங்க, முதலையின் இரத்தத்தில் இருந்து பெறப்படும் ரசாயனப் பதார்த்தத்தைக் கொண்டு எய்ட்ஸ் (AIDS) உயிர்க்கொல்லி நோயை ஓரளவுக்கு குணப்படுத்துவதற்கான மருந்துகளை தயாரிக்க முடியும் என்ற நம்பிக்கை வளர்ந்திருப்பதோடு, அதற்கான முயற்சிகளும் தொடர்கின்றன.

அமினோ அமிலம் மற்றும் புரதத்தின் சில கூறுகள் முதலையின் இரத்தத்தில் கலந்துள்ளன. இந்த ரசாயனப் பதார்த்தத்தை ஒத்த சில வகையான பதார்த்தங்கள் தவளை மற்றும் சில நீர்வாழ் உயிரினங்களின் இரத்தத்திலும் கலந்திருப்பது ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டிருக்கின்றன. அத்துடன், இந்த ரசாயனப் பதார்த்தங்களின் உதவியோடு, எதிர்காலத்தில் மனிதனின் உடம்பிலும் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரித்துக் கொள்ள முடியும் என இது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு வரும் மருத்துவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முதலைகள் பொதுவாக பக்றீரியாக்கள் நிறைந்த சேற்று நிலப்பகுதிகளிலேயே அதிகம் வாழ்கின்றன. அவ்வாறிருக்கும் நிலையில் முதலைகளுக்கு ஏற்படும் காயங்கள் விரைவில் குணமடைவதற்கான காரணம் என்ன? என்ற சந்தேகம் நிலவியதை அடுத்தே, அதன் இரத்த மாதிரி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதன்போதுதான் முதலையின் குருதியில் அமினோ அமிலம் மற்றும் புரதக்கூறுகள் அடங்கியிருப்பதோடு, 23 வகையான கொடிய பக்றீரியாக்களை எதிர்க்கும் சக்தியை அது கொண்டுள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டது.



அத்துடன், இந்த முதலையின் இரத்தத்தை எச்.ஐ.வி வைரஸுடன் கலந்தபோது, எச்.ஐ.வி வைரஸ் கூறுகள் சில அழிக்கப்பட்டமை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதனை அடுத்தே முதலையின் இரத்தம் எச்.ஐ.வி வைரஸை ஓரளவுக்கு அழிக்கும் சக்தி கொண்டது எனக் கண்டறியப்பட்டது.



அதன்படி, சுமார் 7 அல்லது 10 வருடங்களில் முதலையில் இரத்தத்தில் இருந்து தயாரான கிரீம் அல்லது மருந்து வில்லைகளை மருந்தகங்களில் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இதனால், மனிதனுக்கு பக்றீரியாக்களினால் ஏற்படும் பலவிதமான நோய்களைக் குணப்படுத்தக்கூடியதாக இருப்பதோடு, மனித உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கக் கூடியதாகவும் இருக்கும்.

**முதலையின் குருதியில் அமினோ அமிலம் மற்றும் புரதக்கூறுகள் அடங்கியிருப்பதோடு, 23 வகையான கொடிய பக்றீரியாக்களை எதிர்க்கும் சக்தியும் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது**

எனினும், முதலை இரத்தம் மனித உடலுக்கு தீங்கு உண்டாக்கக்கூடியது. மனித இரத்தத்துடன் முதலையின் இரத்தம் கலக்குமாயின், அது விஷத்தன்மையாகி, உயிருக்கு ஆபத்தைக் கூட ஏற்படுத்தலாம் என்ற அச்சம் நிலவுகின்றது.

அதனால், அதன் இரத்தத்தில் உள்ள குறிப்பிட்ட ரசாயனப் பதார்த்தங்களை மட்டும் வெளியே எடுத்து, மனிதத் தேவைக்குப் பயன்படுத்துவது தொடர்பாக மேலதிக ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும் என டர்வில்லே என்ற மருத்துவ ஆய்வாளர் கூறுகின்றார். அத்துடன், முதலையின் இரத்தத்தில் ஈருடக வாழிகளுக்கு ஏற்ற Crocodillins என்ற ஒருவகை நோய் மற்றும் பக்றீரியா எதிர்ப்பு சக்தி தானாகவே உருவாவதால் முதலை எவ்வளவுதான் காயப்பட்டாலும் அது காயங்களை இயல்பாகவே குணப்படுத்தி விடும்.

என்றாலும், இந்த நோய் எதிர்ப்புச் சக்தியில் எத்தகைய பதார்த்தங்கள், கூறுகள் உள்ளன என்பதைக் கண்டு பிடிப்பதுதான் சிரமமான காரியம். அதனைக் கண்டு பிடித்துவிட்டால் மருத்துவ வரலாற்றில் புதிய அத்தியாயத்தை எழுதலாம் என்று ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள மருத்துவ ஆய்வாளர்கள் குழுவின் தலைவர் தெரிவிக்கின்றார்.

**அமீர் ஹுசைன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுமதி காரணமாக அழிவை எதிர்நோக்கும்



# கஸ்தூரிமான்

**உலகில் வாழும் விலைமதிப்புமிக்க உயிரினங்களுள் கஸ்தூரிமானும் ஒன்றாகும். இந்த மானுக்கு பொருளாதார ரீதியாக இருக்கின்ற மதிப்பு, பெறுமதி காரணமாக அதன் இனமே அழிவுறும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கின்றது.**

இந்தியாவின் இமயமலைப் பிரதேசத்திலும் இதே இமயமலையை அண்டிய பாகிஸ்தான் பிரதேசத்தில் இருந்து அருணாச்சல் பகுதி, இமயமலையின் எல்லைப் பகுதிகளான நேபாளம் சீனாவின் திபெத் மேட்டு நிலப்பகுதி, மொங்கோலியா ஆகிய பிரதேசங்களில் கஸ்தூரிமான்கள் அதிகமாக வாழ்ந்து வருகின்றன. வட சைபீரியாவில் இருந்து சோவியத் ரஷ்யா, பர்மா, கொரியா ஆகிய பகுதிகளிலும் வாழ்கின்றன.

இவை சாதாரணமாக 2-3 அடி வரை நீளம் உடையதாகவும் உயரம் 53 சென்றிமீற்றர் அளவு வரையும் இருக்கும். நிறை 7-17 கிலோகிராம் வரை இருக்கும். ஆண் கஸ்தூரி மானின் வாயில் நாய்களுக்குப் போன்று கீழ் நோக்கியதாக இரண்டு பற்கள் வெளியே தெரியும் வகையில் காணப்படுகின்றன.

இவை பெரும்பாலும் நவம்பர் மாதம் முதல், டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் இனப்பெருக்கத்தில் ஈடுபடுவதோடு ஜூன் மாதம் அளவில் குட்டிகளை ஈனுகின்றன. குட்டிகள் மறைவிடங்களில் தனிமையில் பாதுகாப்பாக வளரும். குறைந்தது இரண்டு மாதங்கள் அளவில் பாதுகாப்பாக மறைவிடங்களில் இருந்து வெளிவரும். குளிர்ச்சியான காலநிலையே இந்த கஸ்தூரி மான் இனத்தின் வளர்ச்சிக்கு மிகவும் உகந்ததாகும்.

கஸ்தூரி மான்கள் மாலையிலும் காலை நேரத்திலும் மிகவும் உற்சாகமாகவும் சுறுசுறுப்பாகவும் துள்ளிக்குதித்து ஓடி ஆடி மகிழும். சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு அமைப்பு (IUCN) அழிவுறும் உயிரினங்கள் வகைப்படுத்தலில் கூடுதலான அச்சுறுத்தலை எதிர்நோக்கும் ஓர் இனமாக கஸ்தூரி மான் இனத்தையும் சேர்த்திருக்கின்றது.

## மதிப்பால் மரணம்

இவ்வாறு இந்த வகை மானினம் அழிவுறும் அச்சுறுத்தலை எதிர்நோக்கக் காரணம் விலைமதிப்பற்ற 'கஸ்தூரி' இந்த மானில் இருந்து கிடைப்பதாகும். பொருளாதார ரீதியாக பெறுமதி வாய்ந்த கஸ்தூரியைப் பெற்றுக்கொள்வதற்காக இவை வேட்டையாடப்படுகின்றன.





கஸ்தூரி மானின் சக்கைப் பகுதியில் கஸ்தூரி சேமிக்கப்பட்டிருப்பதால் அதனைப் பெறுவதற்காக அவை வேட்டையாடப்படுகின்றன. ஒரு மானில் இருந்து ஒரு முறையில் 40-70 கிராம் வரையான சொற்ப அளவான கஸ்தூரியே பெறமுடியும். ஒருமுறை கஸ்தூரி பெற்றுக்கொள்ளப்பட்டால் மீண்டும் அவை உருவாகி சேமிப்படைவதற்கு 6 மாதங்கள் வரை செல்கின்றன.

ஒரு கிலோகிராம் கஸ்தூரியின் விலை 70,000-100,000 அமெரிக்க டொலர் வரையாகும். இலங்கை நாணய மதிப்பில் 1 கோடி ரூபாவுக்கு மேல் ஆகும்.

ஒரு கிலோகிராம் கஸ்தூரியைப் பெறுவதற்காக சுமார் 150 கஸ்தூரி மான்கள் வரையில் கொல்லப்படும் துர்பாக்கிய நிலை நிலவுகிறது. நீண்டகாலம் தொட்டு இவ்வாறு கஸ்தூரியைப் பெறுவதற்காக பெருமளவான மான்கள் கொல்லப்பட்டு வருகின்றன. ஆண் மானில் மட்டுமே கஸ்தூரி சுரப்பதால் ஆண் மான்கள் கொல்லப்படுவது இவற்றின் இனவிருத்திக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றது. கஸ்தூரிமான் 2 1/2 வயதாகும் போதே கஸ்தூரி உருவாகின்றது. 14 வருடங்கள் வரையில் இந்த விலை மதிப்பற்ற கஸ்தூரியை அந்த மானில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

நவீன விஞ்ஞான தொழில்நுட்பம் வளர்ந்துள்ள இன்றைய காலகட்டத்தில் மான்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தாமல் தொழில்நுட்பத்தைக் கையாண்டு கஸ்தூரியைப் பெறும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கஸ்தூரி மானை மயக்கமுறச் செய்து தொழில்நுட்பத்தின் உதவியுடன் கஸ்தூரியை ஊசி மூலம் உறிஞ்சி எடுக்கும் நடவடிக்கை தொடர்கின்றது. அதனால், கஸ்தூரிமான் வளர்ப்பு சீனா, திபெத், சைபீரியா போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

## கஸ்தூரி

உலகில் மக்கள் அனைவரும் விரும்பும் வாசனைத் திரவியங்களைத் தயாரிப்பதற்கு கஸ்தூரி மானில் இருந்து பெறப்படும் கஸ்தூரி பயன்படுத்தப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக பல்வேறு வகையான மருந்து வகைகளைத் தயாரிப்பதற்கும் கஸ்தூரி பயன்படுத்தப்படுகின்றது.

சீன மருத்துவ விஞ்ஞானத்தில் கஸ்தூரிக்கு தனித்துவமான இடம் இருக்கின்றது. அரபு நாடுகளிலும் கஸ்தூரியால் மருத்துவ முறைகள் மேற்கொள்ளப்படுவதோடு, மேற்கு நாட்டவரும் அரேபியர்களும் கஸ்தூரியில் கூடுதல் நாட்டம் காட்டுகின்றனர்.

இரத்த பாதுகாப்பு, இருதயத்தின் சரியான இயக்கம், இரத்தம் மற்றும் இருதய நோய்களுக்கு கஸ்தூரியால் தயாரிக்கப்படும் மருந்துகளுக்கு அலாதியான இடம் உண்டு.

வாதம், இருமல், சயரோகம் போன்ற நோய்களுக்கும் கஸ்தூரியால் மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. கஸ்தூரி மானின் சிறுநீர் மலம் என்பனவும் மருந்தாகவே பயன்படுத்தப்படுகின்றன.

அதனால், இன்று கஸ்தூரி உலகில் மிகவும் விலை உயர்ந்த பொக்கிஷமாக மாறியிருக்கின்ற அதேநேரம் கஸ்தூரி மானின் உயிர் மிலேச்சத்தனமான முறையில் பறித்தெடுக்கப்படுவது கவலைக்குரிய விடயமாகும்.

**அமீர் ஹுஸைன்**




பாடசாலை மாணவர்களுக்கான **ஊடக சங்கம்**

விண்ணப்பங்களை அனுப்பி விட்டீர்களா?

தேசிய கல்வி நிறுவகம் - 'விஜய்' இணைந்து நடத்துகின்ற பாடசாலை மாணவர்களுக்கான ஊடக சங்கத்தில் இணைவதற்கான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுக் கொண்டிருக்கின்றன.
நீங்கள் இன்னமும் உங்கள் விண்ணப்பங்களை அனுப்பவில்லையாயின் விரைவாக அனுப்பி வையுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு...


தொ.பே இல - 5383653 அல்லது சுயமுகவரியிடப்பட்டு, முத்திரை ஒட்டிய நீள் கடித உறையொன்றை அனுப்பி விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முகவரி: 'ஊடக சங்கம்' விஜய், த.பெ.எண் 2037 கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிச்டென்ஸ்டைன்








## அமைவிடம்

மத்திய ஐரோப்பாவின் மிகச் சிறிய நாடுகளில் ஒன்று. நாற்புறமும் நிலப் பரப்பால் சூழப்பட்டுள்ளது. இதன் கிழக்கே ஒஸ்ட்ரியாவும் மேற்கு மற்றும் தெற்கில் ஸ்விற்சர்லாந்தும் எல்லைகளாக அமைந்துள்ளன.

மிகவும் உயர்ந்த நில அமைப்பைக் கொண்ட இந்நாடானது, உலகில் இரு



நில அடுக்குகளால் (**Double Land Locked**) சூழப்பட்ட நாடுகளில் ஒன்றாகவும் காணப்படுகின்றது. உலகிலுள்ள ஜேர்மன் மொழி பேசும் நாடுகளில் மிகச் சிறிய நாடு இதுவாகும். உலகின் சுதந்திர நாடுகளில் ஆறாவது சிறிய நாடாகவும் ஐரோப்பிய நாடுகளில் ஆறாவது சிறிய நாடாகவும் இது திகழ்கின்றது.

11 மாநகர சபைகளாகப் பிரிந்து செயல்படும் லிச்டென்ஸ்டைன், உயர்ந்த மலைகளைக் கொண்ட உயரமான நாடாகத் திகழ்வதால் அதிக குளிரான காலநிலையைக் கொண்டு விளங்குகின்றது. இந்நாட்டின் மொத்த சனத்தொகையில் 86% மானோர் அல்மேனிக் இனத்தவர்களாவர். இத்தாலியர், துருக்கியர் என ஏனைய இனத்தவர்களும் இங்கு சிறியளவில் வாழ்கின்றனர். இவர்களின் பிரதான மதமாக ரோமன் கத்தோலிக்க மதம் விளங்குகின்றது.

## வரலாறு

கி.பி 500 ஆம் ஆண்டுக்குப் பின் லிச்டென்ஸ்டைன் நாட்டிற்கு அல்மேனிய கோத்திரத்தார் இடம் பெயர்ந்தனர். லிச்டென்ஸ்டைனை நிர்வகித்து வரும் அரச குடும்பமானது புராதன 'ஒஸ்ட்ரிய' அரச வம்சத்தினைச் சார்ந்ததாகும்.

1719 இல் மீள் ஸ்தாபிக்கப்பட்ட லிச்டென்ஸ்டைன் 1815 முதல் 1866 இல் சுதந்திரத்தை பெற்றுக்கொள்ளும் வரை ஜேர்மனிய அரச சங்கத்தில் அங்கத்துவம் பெற்று இருந்தது. அதன் பின், அவர்கள் 1868 இல் தமது இராணுவத்தை நீக்கியதோடு, சகல ஐரோப்பிய யுத்தங்களிலும் பக்கச்சார்பற்ற நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து, எவ்வித பாதிப்பும் இல்லாத நாடாக திகழ்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

1948 இல் கம்யூனிசவாதிகளால் இந்நாட்டின் ஆட்சி கைப்பற்றப்பட்டது. 1984 ஜூலை மாதம் 1 ஆம் திகதி பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலம் ஆண் வாக்காளர்களால், ''பெண்களுக்கும் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும்'' என்ற கோரிக்கைக்கு ஏற்ப, பெண்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது.

19, 20 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்நாட்டில் புரட்சியேற்பட்டது. இரண்டாம் ஹேன்ஸ் அடம் மன்னன் 1989 இல் தனது தந்தையரான இரண்டாம் பிரான்சிஸ் ஜோசப்பின் மரணத்தின் பின் லிச்டென்ஸ்டைன் நாட்டின் அரசனாக முடி சூடிக்கொண்டான்.

| | |
|---|---|
| தலைநகர் | : வெடுஸ் |
| அரச கரும மொழி | : ஜேர்மன் |
| அரசு | : நாடாளுமன்ற ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்பு முறையைக் கொண்ட வரம்புடைய முடியாட்சி. |
| நாட்டின் தலைவர் | : இளவரசர் இரண்டாம் ஹேன்ஸ் அடம். |
| பிரதமர் | : ஒட்மார் ஹெஸ்லர் |
| மொத்த நிலப்பரப்பு | : 160.4 சதுர கிலோமீற்றர் |
| நாணயம் | : சுவிஸ் ஃபிரேங் |
| காலம் | : கிரீன்வீச் நேரத்தை விட ஒருமணி நேரம் முன்பதாக |
| இணையத்தளம் | : li |
| சர்வதேச தொலைபேசி இலக்கம் | : +423 |



## பொருளாதாரம்

மிகச் சிறிய நிலப்பரப்பையும் வரையறுக்கப்பட்ட இயற்கை வளங்களையும் பயன்படுத்தி, பொருளாதார வளர்ச்சியில் முன்நிற்கும் லிச்டென்ஸ்டைனில் தற்பொழுது அங்கிருக்கும் சனத்தொகையிலும் அதிகமான வர்த்தக நிறுவனங்கள் உள்ளன.

இந்நாட்டில் அபிவிருத்தி அடைந்த-கைத்தொழில் மயமான-சிறந்த தொழில்நுட்பத்துடன் கூடிய சுதந்திரமான பொருளாதாரம் நிலவுகின்றது. ஆரம்பகாலம் முதல் விவசாய சம்பிரதாயத்தை அடிப்படையாகக் கொண்ட இந்நாடு,கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பத் துறைகளிலும் நாளுக்கு நாள் முன்னேறி வருகின்றது. இந்நாட்டின் பிரதான உற்பத்திப் பொருட்களாக இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், தகர உற்பத்தி, மூக்குக்கண்ணாடி, இலத்திரனியல் உதிரிப்பாகங்கள், தைத்த



ஆடைகள், பீங்கான் கைத்தொழில் மற்றும் நுகர்வுப் பொருட்களும் இருக்கின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்களில் அதிகமானவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

உல்லாசப் பயணத்துறை நாட்டின் முக்கிய வருவாய்த் துறையாக விளங்குகின்றது. திறந்த பொருளாதாரம் நிலவும் உயர் தொழில்மயநாடு என்றும் கூறலாம்.

ஜேர்மனி, ஒஸ்ட்ரியா, பிரான்ஸ், இத்தாலி, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஸ்விற்சர்லாந்து ஆகிய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பினை மேற்கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுவட்டுக்கு இப்பொழுது வயது 27




1981ஆம் ஆண்டு உலகின் முதலாவது இறுவட்டை (CD) ஜேர்மனியிலிருக்கும் 'ஃபிலிப்ஸ்' நிறுவனம் வெளியிட்டது. இந்த இறுவட்டு ஜப்பானின் 'சோனி' நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்டது. இதுவரை, உலகம் முழுவதும் விற்பனை செய்யப்பட்டுள்ள இறுவட்டுக்களின் எண்ணிக்கை 200 பில்லியனையும் தாண்டிவிட்டது.

தற்போது இறுவட்டுகளில் பாடல், தகவல், நிழற்படம், மென்பொருள் மற்றும் திரைப்படங்களும் சேமித்து வைக்கப்படுகின்றன.



இன்று உலகிலேயே அதிக அளவில் சீடி, டிவிடிகளை தயாரிப்பது இந்தியாவின் 'மோஸர் பேயர்' நிறுவனம்தான்.

இந்த நிறுவனத்தினூடாக வருடத்திற்கு 3.2 பில்லியன் இறுவட்டுகள் தயாரிக்கப்படுகின்றன.

ஜே.பி.ஏ.விபாகர்

# நேரக்கணிப்பின் ஆரம்பம்


Sundial கடிகாரம்

பெபிலோனியர்கள்தான் முதன் முதலில் நேரத்தைக் கணிப்பிட்டனர். அவர்கள் சூரிய வெளிச்சத்தின்போது நீண்ட நிழலை வைத்து முற்பகல் எனவும் பகல் நேரத்தில் குறுகிய நிழல் இருப்பதையும் பின்னர் மீண்டும் மாலை வேளையில் நீண்ட நிழல் இருப்பதையும் அவதானித்து நேரத்தைக் கணிப்பிட்டு வந்தனர். இந்த நிழல் நேரக் கணிப்பீட்டினை அடிப்படையாக வைத்து எகிப்தியர்கள் சூரிய சுழற்சி (Sundial) கடிகாரத்தை அறிமுகப்படுத்தினர். இது நாளடைவில் உலோகத் தகட்டில் எண்கள் குறிக்கப்பட்டு, முட்களைக் கொண்டு நேரத்தைக் குறிப்பதாகவும் அமைந்தது.


சுவர்க்கடிகாரம்

இதனையடுத்து 14 ஆம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் சுவர்க்கடிகாரம் பயன்படுத்தப்பட்டதோடு, 15 ஆம் நூற்றாண்டில் மணியடிக்கும் கடிகாரம் பாவனைக்கு வந்தது.

# 2008 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



கம்பளை, ஸாஹிரா கல்லூரியில் கல்வி பயிலும் மாணவி ஏ.எஸ்.அமானி, இவ்வாண்டுக்கான தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் 128 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் ஐ.ஏ.ஸத்தார்-ரியாஸா தம்பதியினரின் புதல்வியாவார்.



கலகெதர, க/ஜப்பார் மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் எம்.என்.இம்ரா, 152 புள்ளிகளைப் பெற்று இவ்வாண்டின் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். இவர் கலகெதரவைச் சேர்ந்த ஏ.எம்.எம்.நுஸைர்-எம்.டி.எஸ்.நலீரா தம்பதியினரின் புதல்வியாவார்.



ப/பாதினாவெல முஸ்லிம் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் சிவப்பிரியதர்ஷனி, இவ்வாண்டு நடைபெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 139 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளதோடு, பதுளை மாவட்ட மட்டத்தில் 24 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். இவர் சோமசுந்தரம்-இந்ராணி தம்பதியினரின் புதல்வியாவார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வுக்கு வளம் சே

'பூமியில் எப்போது உயிரினங்கள் தோன்றின என்பது புரியாத விடயம். ஆனால், அவை 4.3 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியிருக்கக்கூடும் என்று கருத ஆதாரம் உள்ளது. ஏனெனில், உயிரின வளர்ச்சிக்கு ஏற்ற மூன்று முக்கிய மூலாதாரங்கள் அப்போது பூமியில் இருந்தன.

அதில் ஒன்று வெப்ப ஒளிச்சக்தி உடைய சூரியன். இரண்டாவது அடிப்படை ரசாயன மூலங்கள், மூலக்கூறுகள் (ஹைட்ரஜன், ஒக்சிஜன், நைட்ரஜன், காபன் போன்றவை), மூன்றாவது நீர். பூகோளம் தோன்றி 200 மில்லியன் ஆண்டுகளுக்குள் உயிர் விருத்திக்கு வேண்டிய மூலாதாரங்கள் அனைத்தும் உண்டாகிவிட்டன.

(மார்க் ஹெரிஸன் : பேராசிரியர் புவியியல் ரசாயனம்)




நீரானது வரையறுக்கப்பட்ட ஒரு வளமாகும். நாம் உணவின்றி சில தினங்களுக்கு உயிர் வாழலாம். ஆனால், நீரின்றி இவ்வுலகில் எந்த ஒரு உயிரும் நிலைத்திருக்க முடியாது. அத்துடன், மனிதனின் முறையற்ற செயற்பாடுகளினால் நீர் வளம் மாசுபட்டும் உள்ளது.

உலகில் உயிரின் தோற்றத்திற்கும் நாகரிகங்களின் வளர்ச்சிக்கும் மூல காரணமாக இருப்பது நீராகும். எமது உடலில் 65% நீர் உள்ளது. ஏனைய பௌதீக பொருட்களில் 50-75% வரை நீர் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

## உயிரின் ஆரம்பம்

சமுத்திரத்தில் தோற்றம் பெற்ற முதலாவது உயிரினம் பெரிய விலங்காக மாற்றமடைந்து, தரையில் வாழப் பழகிக் கொண்டது. இதுவே மனிதன் உட்படஅனைத்து உயிரினங்களின் தோற்றத்தினதும் முதல்படி எனக் கூறப்படுகின்றது. அதன்படி, உலகில் முதலாவது உயிரினம் நீரிலிருந்தே தோன்றியது என்று கருதப்படுகின்றது.

## நீரின் தோற்றம்

நீர் இயற்கையின் கொடையாகும். ஐதரசன் மூலக்கூறுகள் இரண்டும் ஒட்சிஜன் மூலக்கூறு ஒன்றும் சேர்ந்த சேர்வைதான் நீர். இந்த சேர்வை $H_2O$ என அழைக்கப்படுகின்றது. ஒரு நீர்த்துளியில் இந்த மூலக்கூறுகள் மில்லியன் கணக்கில் இருக்கின்றன. பனிக்கட்டியாக இருக்கும்போது திண்ம நிலையிலும் ஆறு, கடல், ஓடைகளில் அது திரவ நிலையிலும் வாயு மண்டலத்தில் வாயு நிலையிலும் நீர் காணப்படும்.

## நீர் வளம்

புவியின் உட்பகுதியில் நான்கில் மூன்று பங்கு நீர் உள்ளது. புவியில் உள்ள மொத்த நீரின் கொள்ளளவு 1600 கோடி கிலோ மீற்றர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அத்துடன், இங்குள்ள பொருட்களில் திண்ம, திரவ, வாயு நிலையில் கிடைக்கக் கூடிய ஒரே பொருள் நீர் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

## மழை

சூரிய வெப்பம் காரணமாக நீர் ஆவியாகி மேல் எழுகின்றது. இவ்வாறு நீர் ஆவியாகும்போது வாயு நிலையை அடைகின்றது. இதுவே நீராவியாகும். நீராவி குளிர் காற்றுடன் மோதும்போது அது திண்ம நிலையை அடைவதோடு, நீர்த்துளிகள் மேகங்களில் தேக்கமாகின்றன. இவ்வாறு மேகங்களில் அதிகளவு நீர் சேரும்போதுதான் அது மீண்டும் பூமியை நோக்கி மழையாகப் பொழிகின்றன. மேகங்களிலிருந்து விழும் ஒரு மழைத்துளியின் விட்டம் 0.5 மில்லிமீற்றராகக் காணப்படும். எனினும், அது மேலிருந்து கீழ் நோக்கி வரும்போது மேலும் விசாலமடைகின்றது.

## நீர்ச் சக்கரம்

பூமியிலுள்ள நீர்நிலைகள், நிலம் மற்றும் வாயு மண்டலத்துடன் நடைபெறும் நீர் சுழற்சி முறையே 'நீர்ச் சக்கரம்' எனப்படுகிறது. அதாவது, சூரிய வெப்பத்தினால் நிலம், நீர் நிலைகளிலிருந்து ஆவியாகி மேலெழும் நீரானது மழையாகப் பூமியை வந்தடைகின்றது. மீண்டும் அதே நீர் ஆவியாக மேலெழுகின்றது. இந்நிலை ஒரு சக்கரம் போல் சுழன்று கொண்டே இருக்கும்.

## மனித உடலும் சுகாதாரமும்

மனித உடலில் நீர் அதிகளவில் உள்ளது. மனித உடல் நிறையில் 1/2 மற்றும் 2/3 பங்கு அளவில் நீர் உள்ளது. மனித மூளையின் நிறையில் 3/4 பங்கு நீர் உள்ளது. அதே போன்று மனித எலும்புகளின் நிறையில் 20% அதாவது 1/5 பங்கு நீர் உள்ளது. எனினும், இந்த அளவுகள் பால், உடல் நிறை, வயது ஆகிய விடயங்களைப் பொறுத்து மாறுபடும்.

ஒரு நாளைக்கு மனிதன் $2^{1/2}$ லீற்றர் நீரை அருந்த வேண்டும் என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். அதிகம் வியர்வை சிந்தி வேலை செய்பவர்கள் அதற்கேற்ப சற்று அதிகம் நீர் அருந்தலாம். எனினும், நாம் ஒரு நாளைக்கு அருந்தும் நீரின் அளவு அளவுக்கு மிஞ்சியதாகவும் இருக்கலாகாது. தேவைக்கு அதிகமாக நீர் அருந்தினால் அது உடலிலுள்ள உப்புச்சத்துக்களைக் கரைத்து அடர்த்தியைக் குறைத்துவிடும். உடல் கலன்கள் மற்றும் உறுப்புக்களை

**நீர் நிலை வடிவம்**

- ★ சமுத்திரம்
- ★ க்லெசியர் மற்றும் பனிப்போர்வை
- ★ ஆறு-ஏரி-ஏனைய சிறிய நீர்நிலைகள்
- ★ நிலக்கீழ் நீர்
- ★ நீராவி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம்.

வில்
யில்
வில் நீர்
நிறை
அதே
ன்
5 பங்கு

வீக்கமடையச் செய்துவிடும். மூளைக்கு அதிக அழுத்தத்தையும் வீக்கத்தையும் கொடுக்கக்கூடும். இது கடைசியில் மரணத்தையும் சம்பவித்துவிடும். எனவே, ஒரு நாளைக்கு உடலின் தேவைக்கேற்ப நீர் அருந்துவதே நல்லது.

## சிக்கனமாகக் கையாள்வோம்

நீரை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். நீரை சிக்கனமாகப்

| | நீரின் அளவு (%) |
|---|---|
| | 97.2% |
| ...பிப்போர்வை | 2.1% |
| ...ய நீர்நிலைகள் | 0.009% |
| | 0.62% |
| | 0.001% |

மாசடைகின்றது. இதன் போது பல தொற்று நோய்களும் பரவலாம். மனிதனின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக நீரும் இருக்கின்றது. எனினும், இந்நீர் மாசுபடுத்தப்படும்போது குடிப்பதற்கும் ஏனைய தேவைகளுக்கும் நீர் பற்றாக்குறை ஏற்படலாம்.

## உங்களுக்குத் தெரியுமா?

* புவியில் அதிக ஈரலிப்புக் கொண்ட பிரதேசம் - ஹவாய் தீவின் 'வை அலே அலே' என்ற இடமாகும்.
* உலகின் மிக வும் வறண்ட பிரதேசம் - அமெரிக்காவின் 'அட்டகாமா' பாலைவனமாகும்.
* உலகில் அதிக தண்ணீர் கொள்ளளவு இருப்பது - தென் அமெரிக்காவின் அமேசன் நதியாகும்.
* இலங்கையில் அதிக தண்ணீர் கொள்ளளவு இருப்பது - மகாவலி ஆற்றிலாகும்.
* நாளாந்தம் அதிக வேகத்தில் தண்ணீர் வீழ்வது - நயகரா நீர்வீழ்ச்சியில் (செக்கனுக்கு 5525 மீற்றர்)
* பாரிய மரமொன்று நாளாந்தம் 8 லீற்றர் தண்ணீரை நிலத்திற்கு அடியில் இருந்து உறிஞ்சிக் கொள்ளும்.
* ஒரு லீற்றர் நீரின் நிறை 1 கிலோகிராம்.
* தண்ணீரின்றி அதிக காலம் வாழும் விலங்கு ஒட்டகம். அது மூன்று வாரங்களுக்கு தண்ணீரின்றியே வாழுமாம். அதேவேளை, ஒட்டகம் ஒரு தடவையில் 20 லீற்றர் தண்ணீரை அருந்தும்.

## நீரினால் பரவும் நோய்கள் சில...

* வயிற்றோட்டம்
* இரத்த வயிற்றோட்டம்
* தைஃபொயிட் காய்ச்சல்
* மஞ்சள் காமாலை
* புழு நோய்
* எலிக் காய்ச்சல்

# ...சேர்க்கும் நீர்



ம்,
ப்
1/2
டும்
ிக்கின்
தி
கேற்ப
ம்.
கு
வுக்கு
காது.
ருந்தி
புச்சத்
ியைக்

பயன்படுத்துவதனால் அதனை சேமிக்க முடிவதுடன், நீர் கட்டணமும் குறைவாகவே இருக்கும்.

நீரை வீணாக்குவதன் மூலமும் மாசடையச் செய்வதனாலும் நீர் பற்றாக்குறை ஏற்பட்டு வறட்சி ஏற்படும். நீர் பற்றாக்குறையானது விவசாயம் உள்ளிட்ட பல விடயங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

## நீர் மாசடைதல்

நிலக்கீழ் நீர் மாசடைவதால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஐ.நா.வின் தகவலின்படி, உலகில் நாளாந்தம் பல தொன் அழுக்குகள் நீர் நிலைகளில் கலப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது. ஒரு லீற்றர் நீர் மாசடையும்போது, அதனால் மேலும் 8 லீற்றர் நீர் இயல்பாகவே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பம் வரும்போது சிரி....

வாழ்க்கை என்பது இன்பம், துன்பம் இரண்டும் சேர்ந்தது. வாழ்நாள் முழுவதும் இன்பத்துடன் வாழ்வோரும் இல்லை. அதே போல் துன்பமடைவோரும் இல்லை. மாறாக இன்பம், துன்பம் இரண்டையும் பருவ காலம் போல் மாறி மாறி அனுபவிக்கிறோம். இன்பத்தை விரும்பி ரசிக்கும் அளவிற்கு யாரும் துன்பத்தை விரும்பி ஏற்பதில்லை. காலத்தின் கட்டாயத்தால் துன்பத்தை சுமக்கிறார்கள்.

நம்மிடம் குடிகொண்டிருக்கும் துன்பத்திற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். பிரிவு, தோல்வி, ஏமாற்றம், நஷ்டம், ஏழ்மை என எத்தனை காரணங்கள் இருந்தாலும் அனைத்தையும் தூக்கி எறியவேண்டும். அதற்கு இலகுவான வழி, வாய்விட்டு சிரிப்பது தான். 'வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்' என்பார்கள். ஆம்! உண்மையில் வாய்விட்டுச் சிரிக்கும்போது நம்மைத் தொற்றியுள்ள பிரிவு, தோல்வி, ஏமாற்றம், நஷ்டம், ஏழ்மை என அனைத்தும் ஓடிவிடும்.

மகாத்மா கூட சிரிப்பின் மகத்துவத்தை உணர்த்தும் வகையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். ''நகைச்சுவை உணர்வு இல்லாவிட்டால் நான் எப்போதோ தற்கொலை செய்து கொண்டு இருப்பேன்''. இதன் மூலம் ஒருவனைத் துன்பம் தற்கொலைக்கு இட்டுச் செல்லக்கூடியது என்றும் அதிலிருந்து மீள சுலபமான வழி நகைச்சுவை உணர்வு தரும் சிரிப்பு எனவும் தெளிவாகிறது அல்லவா? அத்தனை பெரிய மகானுக்கே தற்கொலை செய்யும் உணர்வு தோன்றியிருப்பின் நம் போன்றவர்கள் சிறு பிரச்சினைகளுக்கே அம்முடிவுக்கு வருவதில் வியப்பில்லை. எனினும், மகாத்மா கண்ட தீர்வு சிரிப்பு எனும் போது நாமும் வாழ்வில் நகைச்சுவையுணர்வுடன் சிரித்துக்கொண்டு வாழலாம் அல்லவா?



மேலும், சிரிப்பு எவ்வளவு அவசியம் என்பது ஆபிரஹாம் லிங்கனின் கூற்றிலிருந்தும் புலப்படுகின்றது.

''அல்லும், பகலும் வருத்தும் பயங்கரச் சுமைக்கிடையில் நான் அவ்வப்போது சிரிக்காவிட்டால் என் உயிரே போயிருக்கும்'' இதிலிருந்து சிரிப்பதன் ரகசியம், அதன் முக்கியத்துவம் புலப்படுகிறதல்லவா? துன்பங்களை எண்ணி எண்ணி வருந்துவதால் அவை மேலும் கூடுமேயன்றி எள்ளளவும் குறையாது. எனவே, துன்பங்களை மறந்து பூக்களைப் போல சிரிக்க நாம் கற்றுக் கொள்வோம்.

'துன்பங்களையே தராதே இறைவா!' என பிரார்த்திப்பதை விட துன்பங்களைத் தாங்கும் இதயத்தை கேட்கப் பழகிக் கொள்ளுங்கள். வாழ்க்கை வசந்தமாகும். இயற்கையை ரசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள், துன்பம் தூர விலகி ஓடும். சிரிக்கும் மலர்களைப் போல் சிரிக்கக் கற்றுக் கொண்டால் வாழ்வில் மகிழ்ச்சி மணம் வீசும்.

**முஸ்ரிபா அபால்தீன்,**
**வடதெனிய, கண்டி.**

## நாடுகளின் சிறப்புப் பெயர்கள்

| | |
|---|---|
| ★ ஆயிரம் தடாகங்களின் நாடு | - பின்லாந்து |
| ★ சூரியன் உதிக்கும் நாடு | - ஜப்பான் |
| ★ நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு | - நோர்வே |
| ★ வெள்ளை யானை நாடு எனப்படுவது | - தாய்லாந்து |
| ★ மரகதத் தீவு எனப்படும் நாடு | - அயர்லாந்து |
| ★ லில்லிப் பூக்களின் நாடு எனப்படுவது | - கனடா |
| ★ இருண்ட கண்டம் எனப்படும் நாடு | - ஆபிரிக்கா |
| ★ அதிகாலை அமைதி நாடு | - கொரியா |
| ★ ஐரோப்பாவின் நோயாளி எனப்படுவது | - துருக்கி |
| ★ கங்காருகளின் நாடு | - அவுஸ்திரேலியா |
| ★ கேக் வகைகளின் நாடு | - ஸ்கொட்லாந்து |
| ★ புனித நாடு எனப்படுவது | - பலஸ்தீனம் |
| ★ பொற்கோபுர நாடு எனப்படுவது | - மியன்மார் |
| ★ புன்னகை நாடு எனப்படுவது | - தாய்லாந்து |
| ★ உலகின் சர்க்கரைக் கிண்ணம் எனப்படும் நாடு | - கியூபா |

தொகுப்பு: பி.மொனிக்கா கிஷாந்தி,
கொ/புனித அன்னம்மாள் த.ம.ம.வித்.,கொழும்பு-13.




படத்தை இங்கே ஒட்டவும்

விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:..............................
முகவரி:..............................
..............................
பாடசாலை:..............................
வகுப்பு:..............................
திகதி:..............................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு







# சுண்டெலியின் கர்வம்

காட்டில் பார்வையற்ற சுண்டெலிக்குட்டி ஒன்று வாழ்ந்து வந்தது. அது தன் கண் குருடு என்பதை யாரும் அறியக்கூடாது என்று எண்ணியது. அது காற்றின் அதிர்வுகளைக் கொண்டும் தொடு உணர்வுகளைக் கொண்டும் பொருட்களை அடையாளம் கண்டுகொள்ளும். சக்தியை வளர்த்துக் கொண்டது.

'தனக்கு எல்லாம் தெரியும்; தன்னால் எதையும் தெரிந்து கொள்ள முடியும்' என்று கர்வமும் கொண்டது.

தாய் எலிக்கு அதன் கர்வம் வேதனையை உண்டுபண்ணியது. ''குழந்தாய் நன்றாகப் பார்க்கக்கூடிய சக்தி உள்ளவர்களுக்கே சில பொருட்கள் கண்ணில் தென்படுவதில்லை. நான் என்ன பாவம் செய்தேனோ, இறைவன் உன்னைக் குருடாக்கி விட்டான். உன் நிலை உணர்ந்து அதற்குத் தக்கபடி நடந்து கொள்'' என்று புத்திமதி கூறியது.

''அம்மா நீதான் என்னை இன்னும் குழந்தையாக நினைக்கிறாய். எல்லாப் பொருட்களையும் பார்த்து அறிந்து கொள்ளும் சக்தி எனக்கு உள்ளது'' என்று அகங்காரத்தோடு கூறியது'' குருட்டுச் சுண்டெலி. இதற்குப் புத்தி கற்பிக்க வேண்டும். இல்லையானால் திருந்த வழியில்லை என்று சுண்டெலியின் தாய் முடிவு செய்தது.



கற்பூரத்தைக் கொண்டு வந்து தன் குட்டி எலியின் முன் வைத்தது. ''இது என்னவென்று சொல் பார்க்கலாம்'' என்றது தாய்.

அதைத் தடவிப் பார்த்த குட்டி எலி, ''இது வாசனை சாம்பிராணி'' என்று கூறியது. அதைக் கேட்ட தாய் மிகவும் வருந்தியது. ''குழந்தாய்! இது வரையில் உனக்கு கண் மட்டும்தான் குருடு என்று எண்ணியிருந்தேன். இப்பொழுதுதான் நீ மூக்கால் நுகரும் சக்தியையும் இழந்து விட்டாய் என்பதும் தெரிகிறது. நான் உன் முன் வைத்த பொருளை நுகர்ந்தே பார்த்திருக்கலாம். உன்னால் அதுவும் இயலவில்லை'' என்று கூறிக் கண்ணீர் விட்டது. எல்லாம் எனக்குத் தெரியும் என்று கர்வம் கொள்ளக் கூடாது. 'கற்றது கை மண்ணளவு; கல்லாதது உலகளவு'' என்று பெரியவர்கள் கூறியுள்ளார்கள். எல்லாம் தெரிந்ததாக நடிப்பது அவமானத்தை தந்து அவலத்தையும் ஏற்படுத்திவிடும்.

ஷம்ருத் ஹனபி,
நளீம் ஹாஜியார் மகளிர் கல்.,
சீனன்கோட்டை,
பேருவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



ச.துஜிந்தன்,
தரம் - 8B,
புனித பத்திரிசியார் கல்.,
யாழ்ப்பாணம்.



க.சுதர்சன்,
தரம் - 13(கலை),
அக்/இராமகிருஷ்ணா கல்.,
அக்கரைப்பற்று-07.



எம்.ஏ.சி.எஃப்.நஸ்ரா,
தரம் - 7A,
க/அகுறனை மு.பா.வித்.,
அகுறனை.



எம்.எஸ்.பி.சாகிரா,
தரம் - 6,
தித்தவெல்காலை மு.வித்.,
குருணாகல்.



எம்.எச்.எப்.அஸீனா,
தரம் - 6B,
க/அல்மனார் தே.பாட.,
கல்ஹின்னை.



ஜொனதன் சத்தியமூர்த்தி,
தரம் - 8,
புனித சூசையப்பர் கல்.,
மருதானை.



எம்.எம்.எம்.அக்ரம்,
தரம் - 9C,
ஸாஹிரா தே.பாட.,
புத்தளம்.



டீ.டானியா,
தரம் - 4,
நோர்வூட் த.ம.வித்.,
நோர்வூட்.

## விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



தெரணியகலை, இலுக்தென்ன தோட்டத்தைச் சேர்ந்த மணிவேல்-சித்ராதேவி தம்பதியினரின் புதல்வன் மனோகரன், தனது ஐந்தாவது பிறந்தநாளை 25.11.2008 அன்று தனது இல்லத்தில் விமர்சையாகக் கொண்டாடினார். இவரை குடும்பத்தினர் அனைவரும் இறைவனின் அருள் பெற்று வாழ வாழ்த்துகின்றனர்.



தன்ஓவிடையைச் சேர்ந்த நஸீர்-ஹலீமா தம்பதியினரின் புதல்வன் மொஹமட் நாஜீத், தனது நான்காவது பிறந்தநாளை 21.11.2008 அன்று தனது இல்லத்தில் கொண்டாடினார். இவரை குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் சகல செல்வங்களையும் பெற்று வாழ வாழ்த்துகிறார்கள்.

*(தகவல்-எம்.எம்.எஃப்.ஸஸ்னியா)*



வட்டவளையைச் சேர்ந்த நவரட்ணராஜா-விமலா தம்பதியினரின் புதல்வியான அபிஷாலனி, தனது ஏழாவது பிறந்தநாளை 21.11.2008 அன்று தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரை பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் ஸ்ரீ முத்துமாரியம்மன் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்-சசிதரணி)*

## ஷ்... உங்களுக்கு மட்டும்!



* கலிஃபோர்னியா மாநிலத்தின் நெவாடாவிலுள்ள மலைத்தொடரின் ஊசியிலைக் காடுகள் நீர் பற்றாக் குறையினால் அழிந்து வருகின்றன. புவி வெப்பமடைதலே இதற்கான பிரதான காரணமாக இருப்பதாக சுட்டிக் காட்டப்படுகின்றது. இந்நிலை உலகின் ஏனைய பகுதிகளிலுள்ள மரங்களையும் அழித்து விடலாம் எனக் கருதப்படுகின்றது.
* திமிங்கிலங்கள் ஏனைய மீன்களின் இதயத்துடிப்பைக் கேட்டுத்தான் அம்மீன்கள் உள்ள இடங்களை அறிந்து கொள்கின்றன.
* ஆபிரிக்காவிலுள்ள 'ஜேர்போ' (Jerboa) எனும் ஒருவகை எலிகள் தலையைத் திருப்பாமலேயே பின்னால் உள்ள பொருட்களைப் பார்க்கக்கூடியன. அத்துடன், அவை 10 அடி தூரத்திற்குப் பாயும் திறனையும் கொண்டுள்ளன.



## விஜய் மாணவர் கழகம்


அங்.இல : 2259
எம்.ஏ.சானாஸ்,
தரம் - 6D,
அல்-முபாரக் தே.பா.,
மல்வானை.


அங்.இல : 2260
மு.கலாபிரகாஷினி,
தரம் - 6A,
தமிழ் மகளிர் ம.வித்.,
பதுளை.


அங்.இல : 2261
எம்.சாமில்,
தரம் - 5A,
க/தாருல் ம.வித்.,
அகுறனை.


அங்.இல : 2262
ஆர்.அம்பிகாவதி,
தரம் - 10,
பது/பட்டவத்தை த.வித்.,
பதுளை.


அங்.இல : 2263
ச.தனேஸ்ராஜா,
தரம் - 13(வர்த்தகம்),
புனித ஜோன் பொஸ்கோ கல்.,
ஹட்டன்.


அங்.இல : 2264
மு.உமாகாயத்திரி,
தரம் - 9C,
ஊவா விஞ்ஞானக் கல்.,
ஹாலி-எல.


அங்.இல : 2265
இரா.பரிலோஜிதன்,
தரம் - 10V,
குருமண்வெளி சி.ச.ம.வித்.,
குருமண்வெளி.


அங்.இல : 2266
ஜே.ஜுல்ஃபிகான்,
தரம் - 11A,
நுரைச்சோலை மு.ம.வித்.,
நுரைச்சோலை.


அங்.இல : 2267
ஆசிக் அகமட்,
தரம் - 5,
ஆண்கள் பாட.,
அக்கரைப்பற்று.


அங்.இல : 2268
ந.சர்மீரன்,
தரம் - 13(வர்த்தகம்),
கிளி/அக்கராயன் ம.வித்.,
அக்கராயன்.


அங்.இல : 2269
ச.கஜந்தன்,
தரம் - 5A,
யா/கொடிகாமம் த.ம.வித்.,
கொடிகாமம்.


அங்.இல : 2270
அ.அனுஸ்ரன்,
தரம் - 11I,
புனித பேதுரு கல்.,
கொழும்பு-04.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் பயில்வோம்




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் அக்காவுக்கும் தங்கைக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

අක්කා: නංගි මට මල් ටිකක් ඕනේ.
நங்கி மட மல் டிகக் ஓணே.
அக்கா: தங்கச்சி எனக்கு பூக்கள் கொஞ்சம் வேண்டும்.

නංගි: මල් ඇයි අක්කේ?
மல் எய் அக்கே?
தங்கை: பூக்கள் ஏன் அக்கா?

අක්කා: හෙට රැස්වීමක් ඒකට මල් ඕනේ.
ஹெட ரெஸ்வீமக். ஏகட மல் ஓணே.
அக்கா: நாளைக்கு ஒரு கூட்டம். அதற்கு பூக்கள் வேண்டும்.

නංගි: මොන මල්ද ඕනේ?
மொன மல் த ஓணே?
தங்கை: என்ன பூக்கள் வேண்டும்?



අක්කා: ඇන්තූරියම් මල් හොඳයි.
அந்தூரியம் மல் ஹொந்தய்.
அக்கா: அந்தூரியம் பூக்கள் நல்லது.

රත්මල් හොඳයි.
ரத்மல் ஹொந்தய்.
செவ்வந்திப் பூக்கள் நல்லது.

රෝස මල් හොඳයි.
ரோஸ மல் ஹொந்தய்.
ரோஜாப் பூக்கள் நல்லது.

පිච්ච මල් හොඳයි.
பிச்ச மல் ஹொந்தய்.
மல்லிகைப் பூக்கள் நல்லது.



නංගි: මල් ගොඩක් ඕනේද?
மல் கொடக் ஓணேத?
தங்கை: பூக்கள் அதிகம் வேணுமா?

අක්කා: නෑනෑ, මල් ටිකක් තිබුණොත් ඇති.
நெஹெ, மல் டிகக் திபுணொத் எதி.
அக்கா: இல்லை, பூக்கள் கொஞ்சம் இருந்தால் போதும்.

නංගි: හොඳයි අක්කේ, මම මල් ගේන්නම්.
ஹொந்தய் அக்கே, மம மல் கேண்ணம்.
தங்கை: நல்லது அக்கா, நான் பூக்கள் கொண்டு வாரேன்.

### பயிற்சி

பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.

உதா: தங்கச்சி எனக்கு பூக்கள் கொஞ்சம் வேண்டும்.
නංගි මට මල් ටිකක් ඕනේ.

i. நாளைக்கு ஒரு கூட்டம் இருக்கு.
........................................

ii. என்ன பூக்கள் வேண்டும்?
........................................

iii. பூக்கள் கொஞ்சம் இருந்தால் போதும்.
........................................






✱ நிகழ்கால தொடர்வாக்கியம் (Present Continuous Tense), இறந்தகால தொடர்வாக்கியம் (Past Continuous Tense) ஆகிய இரண்டு வாக்கியங்களையும் ஒன்றுடன் ஒன்று மேலும் ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) I am looking.
நான் பார்த்துக்கொண்டு இருக்கின்றேன். (நிகழ்காலம்)

(ஆ) I was looking.
நான் பார்த்துக்கொண்டு இருந்தேன். (இறந்தகாலம்)

(அ) I am looking at the road.
நான் தெருவைப் பார்த்துக்கொண்டு இருக்கின்றேன்.
(நிகழ்கால தொடர் வாக்கியம்)

(ஆ) I was looking at the road.
நான் தெருவைப் பார்த்துக்கொண்டு இருந்தேன்.
(இறந்தகால தொடர் வாக்கியம்)

---

(அ) I am waiting.
நான் காத்துக்கொண்டு இருக்கின்றேன்.(நிகழ்காலம்).

(ஆ) I was waiting.
நான் காத்துக்கொண்டு இருந்தேன். (இறந்தகாலம்)

(அ) I am waiting at the school.
நான் பாடசாலையில் காத்துக்கொண்டு இருக்கின்றேன்.
(நிகழ்கால தொடர் வாக்கியம்)

(ஆ) I was waiting at the school.
நான் பாடசாலையில் காத்துக்கொண்டு இருந்தேன்.
(இறந்தகால தொடர் வாக்கியம்)

---

(அ) I am writing.
நான் எழுதிக்கொண்டு இருக்கின்றேன். (நிகழ்காலம்)

(ஆ) I was writing.
நான் எழுதிக்கொண்டு இருந்தேன். (இறந்தகாலம்)

(அ) I am writing a letter.
நான் ஒரு கடிதம் எழுதிக்கொண்டு இருக்கின்றேன்.
(நிகழ்கால தொடர் வாக்கியம்)

(ஆ) I was writing a letter.
நான் ஒரு கடிதம் எழுதிக்கொண்டு இருந்தேன்.
(இறந்தகால தொடர் வாக்கியம்)

---

(அ) I am reading.
நான் வாசித்துக்கொண்டு இருக்கின்றேன். (நிகழ்காலம்)

(ஆ) I was reading.
நான் வாசித்துக்கொண்டு இருந்தேன். (இறந்தகாலம்)

(அ) I am reading a newspaper.
நான் ஒரு பத்திரிகையை வாசித்துக்கொண்டு இருக்கின்றேன்.
(நிகழ்கால தொடர் வாக்கியம்)

(ஆ) I was reading a newspaper.
நான் ஒரு பத்திரிகையை வாசித்துக்கொண்டு இருந்தேன்.
(இறந்தகால தொடர் வாக்கியம்)

---

(அ) I am sitting.
நான் உட்கார்ந்துகொண்டு இருக்கின்றேன். (நிகழ்காலம்)

(ஆ) I was sitting.
நான் உட்கார்ந்துகொண்டு இருந்தேன். (இறந்தகாலம்)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.





# உலக பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு தேடல்

உலகில் தற்போது நிலவி வருகின்ற பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு உலகம் பூராவும் திறந்த பொருளாதாரக் கொள்கையை மேம்படுத்துவதற்கு ஆசிய-அமெரிக்க நாடுகளின் தலைவர்கள் இணக்கம் கண்டுள்ளனர். பேரு நாட்டின் லீமா நகரில் இடம்பெற்ற ஆசியா-பசுபிக் பொருளாதாரக் கூட்டுறவு (ஒபெக்) மாநாட்டின் போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

21 நாடுகளை உள்ளடக்கிய இந்த மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ், சீன ஜனாதிபதி ஹூ ஜின்டாவோ, ஜப்பான் பிரதமர் டாரோ ஆசோ உட்பட மற்றும் பல தலைவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இன்னும் இரண்டு மாதங்களில் ஜனாதிபதி பதவிக்காலத்தை முடித்துக் கொள்கின்ற ஜோர்ஜ் டபிள்யூ புஷ் கலந்து கொண்ட சர்வதேச மட்டத்திலான கடைசி மாநாடு இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது. பாரிய பொருளாதார நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ள இன்றைய சூழ்நிலையில் ''நாம் எல்லோரும் ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டும்'' என்று இந்த மாநாட்டின்போது புஷ் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் ஒத்திவைப்பு

பங்களாதேஷில் டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி நடைபெறவிருந்த தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, டிசம்பர் 29 ஆம்



திகதி மேற்படி தேர்தல் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் பிரதமரான காலிதா ஸியா இத்தேர்தலை ஒத்திவைக்குமாறு முன்னதாகவே கோரிக்கை விடுத்திருந்தார்.

ஜனநாயக சூழ்நிலை இல்லாத நிலையில் இத்தேர்தலை நடத்துவது ஏற்றுக் கொள்ள முடியாத விடயம் என்றும், அவ்வாறு நடைபெற்றால் தேர்தலை தமது கட்சி பகிஷ்கரிக்கும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இதனைக் கவனத்திற் கொண்டே பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கம் தேர்தலை ஒத்திவைக்க இணக்கம் தெரிவித்தது. அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கேற்பவே தேர்தல் ஒத்திவைப்பு முடிவு எடுக்கப்பட்டது.

## அமெரிக்காவின் முதலாவது கறுப்பின நீதிபதி

அமெரிக்காவில் நீண்டகாலமாக சட்டத்தரணியாக கடமையாற்றிய எரிக் ஹோல்டன் என்பவரை அந்நாட்டின் நீதிபதியாக நியமிப்பதற்கு அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக வெற்றியீட்டியுள்ள பராக் ஒபாமா தீர்மானித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அவ்வாறு ஹோல்டன் நீதிபதியாக நியமிக்கப்பட்டால் அமெரிக்க வரலாற்றில் நீதிபதியாக நியமிக்கப்பட்ட முதலாவது கறுப்பின நீதிபதி என்ற பெருமையை இவர் பெறுவார். முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன் ஆட்சிக் காலத்தில் ஹோல்டன் துணை நீதிபதியாக கடமையாற்றியுள்ளார். அத்தோடு, இம்முறை ஜனாதிபதி தேர்தலில் ஒபாமாவிற்கு சட்ட ஆலோசகராகவும் இவரே கடமையாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



ஹோல்டனுக்கு தற்போது 57 வயதாகின்றது. இவர் நீதிபதியாக நியமிக்கப்பட்டால் அமெரிக்காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதியின் கீழ் நியமனம் பெற்ற முதலாவது கறுப்பின நீதிபதி என்ற பெருமையையும் இவர் பெறுகின்றார்.



## முன்னாள் ஐ.நா. செயலாளருக்கு அனுமதி மறுப்பு

முன்னாள் ஐ.நா. பொதுச் செயலாளர் கொஃபி அனான் மற்றும் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஆகியோர் சிம்பாப்வே வருவதற்கு அந்நாடு நுழைவு அனுமதி (விசா) வழங்க மறுத்துள்ளது.

சிம்பாப்வேயில் மனித உரிமைகள் மீறப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் நிலவி வருகின்ற நிலையில் இது குறித்து கணிப்பீடொன்றை மேற்கொள்வதற்கு மேற்படி தலைவர்கள் சிம்பாப்வே செல்வதற்கிருந்தார்கள்.

இந்நிலையிலேயே இவர்களுக்கான நுழைவு அனுமதியை சிம்பாப்வே அரசாங்கம் மறுத்துள்ளது.

எனினும், இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள சிம்பாப்வே அதிகாரிகள், கொஃபி அனான் உரிய முறையில் இது குறித்து தம்முடன் கலந்துரையாடவில்லை என்றும், இரண்டு தரப்பினருக்கும் ஏற்ற பொதுவான உடன்பாடான நாளொன்றில் இந்த விஜயத்தை மேற்கொள்வதே நல்லது என்றும் குறிப்பிட்டுள்ளார்.



ஆனால், இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள முன்னாள் ஐ.நா செயலாளர், தமக்கு அனுமதி மறுக்கப்படும் என்பது தாம் எதிர்பார்த்ததே என்றும் எனினும், சிம்பாப்வே மக்களின் கஷ்டங்களை நேரிடையாக அறியும் நோக்கில் இந்த முயற்சியை தாம் மேற்கொண்டதாகவும் இதில் எந்தவொரு அரசியல் உள்நோக்கமும் கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அற்லஸ் கேள்வி - 180

**கேள்வி:** 'ஒபெக்' மாநாட்டில் எத்தனை நாடுகள் பங்குபற்றின?

சரியான விடை........................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 180,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

### போட்டி இல - 178 இன் சரியான விடை: பாவோஷிஸுவான்

பரிசு பெறுவோர்

எம்.ஜே.எம்.ஜஸ்லி,
75/2A, அரபிக் கல்லூரி, காத்தான்குடி-05.

ப.கஜமாலன்,
24/6, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

ஏ.ஜொனார்தன்,
55, புனித பெனடிக்ட் மாவத்தை,
கொழும்பு-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொபர்நிகஸ் என்பவர் யார்?



கொபர்நிகஸின் கல்லறை உள்ள தேவாலயம்

**சிறுவயதிலிருந்தே தனது வீட்டிலிருந்தவாறு காலையிலும் இரவிலும் வானத்தை அவதானித்து வருவதை கொபர்நிகஸ் வழக்கப்படுத்தியிருந்தார். அதுவே அவரின் ஒரே பொழுதுபோக்காகவும் இருந்தது. அவர் தனது வாழ்வின் பெரும்பகுதியை பிரயோகச் செயற்பாட்டிலேயே கழித்தார். சிறுவயதில் இருந்தே அதிகநேரம் சிந்திப்பதற்கும் மிகவும் குறைவாகப் பேசுவதற்கும் தன்னை பழக்கப்படுத்திக் கொண்டார். தனது சிந்தனைகளையும் தர்க்கரீதியிலான கருத்துக்களையும் கொள்கைகளையும் பரீட்சித்துப் பார்த்து, பல்வேறு அரிய கண்டுபிடிப்புகளை உலகிற்கு வெளிப்படுத்திய அவர், பிற்காலத்தில் மாபெரும் விஞ்ஞானியாக போற்றப்பட்டார்.**

## இளமைப் பருவம்

போலந்து நாட்டின் 'லிஸ்டுலா' ஆற்றங்கரையில் அமைந்த ஓர் அழகிய ஊர்தான் 'டோரன்'.இவ்வூரில் 1473, பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி நிக்கலஸ் கொபர்நிகஸ் பிறந்தார். இவரது தந்தையார் ஒரு வர்த்தகராகவும்



கொபர்நிகஸின் வீடு

வழக்கறிஞராகவும் இருந்தார். கொபர்நிகஸின் தந்தை தனது மகனை சிறந்த கல்விமானாக்க வேண்டும் என்று விரும்பினார். அதேபோல் அவர் பாடசாலை கல்வியில் சிறந்து விளங்கினார். இதேவேளை, கொபர்நிகஸின் பத்தாவது வயதில் அவரின் தந்தையார் உயிரிழந்தார். சிறு வயதிலேயே தந்தையாரின் அரவணைப்பை இழந்தது அவருக்கு மனதளவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

## கல்வி நடவடிக்கைகள்

கி.பி 1491 இல் கொபர்நிகஸ் கிராகோ பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். அங்கு கணக்கியல் மற்றும் வானியலை அவர் ஆர்வத்துடன் கற்றார். கொபர்நிகஸின் கணக்கியல் மற்றும் வானியல் அறிவைக் கண்டு பேராசிரியர்கள் வியந்தனர். அப்பொழுது அவருக்கு வயதோ 18 மாத்திரமே. கிராகோ பல்கலைக்கழகமானது அக்காலத்தில் ஜேர்மனி, இத்தாலி, சுவீடன், ஸ்விற்சர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளின் திறமைமிகுந்த உயர்நிலை மாணவர்கள் நிறைந்ததொரு பல்கலைக்கழகமாகும். இப்பல்கலைக்கழகத்தில் லத்தீன் மொழியிலேயே கல்வி பயில வேண்டும். இங்கு கொபர்நிகஸ் நட்சத்திர சாஸ்திரம், சிந்தனைவியல், புவியியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களை ஆர்வத்துடன் கற்றார். நட்சத்திர விஞ்ஞானத்தில் அவர் பெரிதும் ஆர்வத்தை செலுத்தினார். வானியலில் தனக்கிருந்த ஆர்வத்தின் காரணமாக கொபர்நிகஸ் இரவு நேரங்களில் வானியல் ஆராய்ச்சிகளில் ஈடுபட ஆரம்பித்தார். தரையில் படுத்தபடி விண்வெளி ஆராய்ச்சிகளில் ஈடுபட ஆரம்பித்தார். சுமார் மூன்றாண்டு காலம் பல்கலைக்கழகத்தில் படித்த வேளையில் வானியல் ஆராய்ச்சிகளிலும் ஆர்வத்துடன் ஈடுபட்ட கொபர்நிகஸ், 1494 இல் பல்கலைக்கழகப் படிப்பைச் சிறப்பாக முடித்து பட்டதாரியாக தன் சொந்த ஊரான டோரனுக்குத் திரும்பினார்.

பாதிரியாராக சேவை புரிந்த கொபர்நிகஸின் தாய்மாமாவாகிய லூக்கஸ் என்பவரே தந்தையின் இறப்பின் பின் அவர் நலனை கவனித்துக் கொண்டவர். அவர் கொபர்நிகஸை பாதிரியாராக்கி, நற்பண்புள்ளவராக உருவாக்க வேண்டுமென விரும்பினார். கொபர்நிகஸும் இதற்கு சம்மதித்தார். எனினும், அப்பணியில் இணைவதற்கு சிலகாலம் காத்திருக்க வேண்டி இருந்தது. எனவே, அக்காலத்தை வீணாக்க விரும்பாமல் கி.பி 1497 இல் இத்தாலியில் அமைந்த பொலொக்ஞா பல்கலைக்கழகத்தில் சேர்ந்து மருத்துவம், கிரேக்கம் மற்றும் தத்துவம் ஆகிய பாடங்களைக் கற்க ஆரம்பித்தார். அங்கு நட்சத்திர ஆய்வினையும் அவர் கைவிடவில்லை.

பொலொக்ஞா பல்கலைக்கழகம் கொபர்நிகஸின் வாழ்வில் தீர்க்கமான ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அங்கு பொமினிகோடா நொவாரா எனும் வானியல் அறிஞரின் நட்புக் கிடைத்தது. இவர் மூலம் கொபர்நிகஸ் பல வானியல் நுட்பங்களைக் கற்றுக் கொண்டார்.


## கோட்பாட்டின் வெளிப்பாடு

தொலமி உள்ளிட்ட பலரது வானியல் கொள்கைகள் குறித்து கொபர்நிகஸிற்கு மாறுபட்ட கருத்துக்கள் இருந்தன. அக்கொள்கைகளை மறுத்துத் தன் கருத்தை நிலைநாட்ட விரும்பிய கொபர்நிகஸ், தொடர்ந்து வானியல் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வந்தார்.அதன்படி, 1497 மார்ச் 9 ஆம் திகதி விண்வெளி ஆய்வினை மேற்கொண்டு தொலமியின் கொள்கை பிழையென வலியுறுத்தினார்.



NICOLAI
COPERNICI TORINENSIS DE REVOLVTIONIBUS orbium cœlestium,
Libri VI.
IN QVIBVS STELLARVM ET FIXARVM ET ERRATICARVM MOTVS, EX VETERIBUS atque recentibus obseruationibus, restituit hic autor.
BASILEAE, EX OFFICINA HENRICPETRINA

De Revolutionibus புத்தக பிரதி




கொபர்நிகஸின் கையொப்பம்

## கொபர்நிகஸின் வானியல் கொள்கைகள்

- புவியானது கிரகங்களின் கேந்திரமல்ல; அது சந்திரனின் கேந்திரம் மாத்திரமே.
- சூரியனே உலகின் கேந்திரமாகும்.
- புவி தனது சுற்றுப்பாதையில் சுற்றுகின்றது.





- நட்சத்திரத்திற்கும் புவிக்கும் இடையில் உள்ள தூரத்தைவிட சூரியனுக்கும் புவிக்கும் இடையிலுள்ள தூரம் அதிகமாகும்.
- விண்வெளியில் உள்ள அனைத்தும் ஒரே கேந்திரத்தை மையமாக வைத்துப் பயணிப்பதில்லை.
- புவி உள்ளிட்ட ஏனைய கிரகங்கள் அனைத்தும் வருடத்திற்கு ஒருமுறை வானைச் சுற்றி வலம் வருவது போல, ஒரு வருட காலத்திற்குள் சூரியனை ஒரு முறை சுற்றி வருகின்றன.
- பூமியானது உருண்டை வடிவத்தில் அமைந்தது. அது தன்னைத்தானே சுற்றிக் கொள்வதோடு, சூரியனையும் சுற்றி வருகிறது.
- பூமிக்கு ஒளி தரும் சூரியன் ஒரே இடத்தில் நிற்கிறது. சூரியனானது கிழக்கில் தோன்றி மேற்கில் மறைவது போன்ற தோற்றமெல்லாம் உண்மையல்ல.
- நட்சத்திரங்களும் ஒரே இடத்தில் நிலைத்து நிற்கின்றன.

கொபர்நிகஸ் தனது கண்டுபிடிப்புகளை 'சிறிய விளக்கவுரை' என்ற தலைப்பில் ஒரு கையெழுத்துப் பிரதியாக வெளியிட்டார். 'டைகொதப்ராஹி' என்ற நூல் இவ்வாறான ஒரு கையெழுத்திலான நூலாகும். கொபர்நிகஸின் இப்புதிய கருத்துக்களை பலரும் பாராட்டி வரவேற்றனர்.

## இறுதிக் காலம்

ஜோசப் ரிடிகஸ் என்ற பேராசிரியர் கொபர்நிகஸை அணுகி, அவருடைய கண்டுபிடிப்புகளை புத்தகமாக வெளிக்கொண்டு வரும்படி வேண்டினார். அவரின் முயற்சியால் 1543 இல் 'புரட்சி' Revolution (De Revolutionibus) என்ற பெயரில் புத்தகம் ஒன்று வெளியானது. அக்காலகட்டத்தில் கொபர்நிகஸ் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். நூலின் பிரதியொன்று நோய்வாய்ப்பட்டிருந்த கொபர்நிகஸிடம் ஒப்படைக்கப்பட்டது. நூலை வாங்கிப் பார்த்து, மகிழ்ச்சி அடைந்த மறுகணம் அதாவது 1543,மே 24ஆம் திகதி கொபர்நிகஸின் உயிர் பிரிந்தது.

-ப.இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரவில் காவல்காரரிடம் கண்ட மாற்றம்

அந்த இரவு நேரத்தில் திரையரங்குக்குப் பின்னால் மதில் சுவருக்கு அருகில் காவல்காரர் நின்றுகொண்டு இருப்பதையும் அவருக்கு அருகில் அந்தப் பெண் நின்று கொண்டு இருப்பதையும் கண்ட விமல் அதிர்ச்சியும் பீதியும் அடைந்தான்.

அவன் அவர்களைப் பார்த்த அதேநேரம் அவர்களும் அவனைப் பார்த்துவிடுவார்களோ என்ற பயத்தில் அவன் டக்கென்று இருளில் மறைந்து கொண்டான். மறைந்து கொண்டு மீண்டும் அங்கு நோக்கினான்.

இப்பொழுது அங்கே....? அந்தப் பெண்ணைக் காணவில்லை. காவல்காரர் மட்டும் நடந்து வந்து கொண்டிருப்பது தெரிந்தது. அவர் கண்ணில்

**பேய்கள் நடமாடும் இங்கு பதினைந்து வருடகாலமாக தனியாக காவல் வேலை செய்வதால் காவல்காரருக்கு பேய்களுடன் உறவு ஏற்பட்டு அதன்மூலம் இரவில் பேய்க்குணம் ஏற்படும் நிலையை அடைந்து இருப்பாரோ என்று சிந்தித்தான் விமல்**

பட்டுவிடக் கூடாது என்ற எண்ணத்தில் வேகமாகப் போய் தனது அறைக்குள் நுழைந்து சாய்ந்து கொண்டான். அவன் மனம் 'பக் பக்' என்று அடித்துக் கொண்டது. காவல்காரர் இங்கும் வந்து விடுவாரோ என்று நினைக்கையில் அவனுக்கு மிகுந்த நடுக்கமாக இருந்தது.

ஆதலால், போர்வையை இழுத்துப் போர்த்து படுத்துக் கொண்டு உறங்குவது போல் பாசாங்கு செய்து கொண்டு இருந்தான். இத்தனை நாட்களும் உறங்குவதற்கு வழி இல்லாமல் பயத்தினால் தடுமாறிக் கொண்டு இருந்த அவன் இன்று உறங்குவதற்கு வாய்ப்புக் கிடைத்தும் உறக்கம் வராமல் தவித்துக் கொண்டு இருந்தான். அவனுக்குப் பல்வேறு சிந்தனைகள் ஏற்பட்டு அவனை பாடாய் படுத்திக் கொண்டு இருந்தன.

உண்மையில் அந்தப் பெண் யாராக இருக்கும்? அவளுடன் இந்தக் காவல்காரருக்கு என்ன தொடர்பு? நான் பார்க்கும் போதெல்லாம் திடீர் திடீர் என மறைந்து விடுகிறாளே... அதற்கு என்ன காரணம்? சிலவேளை, மாதவன் அண்ணன் சொன்னது போல் காவல்காரருக்குப் பேய்க் கோளாறு எதுவும் இருக்குமோ?




பேய்கள் நடமாடும் இங்கு பதினைந்து வருட காலமாக தனியாக காவல் வேலை செய்கிறார் என்றால் அது சாதாரண மனிதனால் முடிந்த காரியமா? இந்தப் பதினைந்து வருட காலத்தில் இவருக்கு பேய்களுடன் உறவு ஏற்பட்டு அதன்மூலம் இவருக்கு இரவில் பேய்க்குணம் ஏற்படும் நிலையை அடைந்து இருப்பாரோ?''

அவனுக்கு மேலும் மேலும் சிந்தனைகள் ஏற்பட்டு அவனை பயமுறுத்திக் கொண்டு இருந்தன.

''ச்சே! இங்கு இன்னும் சிறிது காலத்துக்கு இருந்தேனானால் எனக்கு சீக்கிரம் பைத்தியமே பிடித்துவிடும் போல் அல்லவா இருக்கிறது. ஒவ்வொரு நாளும் இங்கு நடப்பது எல்லாம் மிகவும் விசித்திரமாக அல்லவா இருக்கிறது. இப்படிப் பலவாறு சிந்தித்துக் கொண்டே உறங்குவதற்கு முயற்சி செய்து கண்களை இறுக மூடிக் கொண்டான்.

அவனுக்குக் காவல்காரரை நினைக்கையில் ஏதோ ஒருவித இனம்புரியாத பயம் ஏற்பட்டது. அந்த வேளையில் 'சரக் சரக்' என்னும் காலடிச் சத்தம் கேட்டது. இந்த நேரத்தில் இங்கு வருவது யாராக இருக்கும். அந்தப் பெண்ணாக இருக்குமோ? அல்லது காவல்காரர் தான் வருகிறாரோ?

யாராக இருந்தாலும் சரி. தூங்குவது போல் பாசாங்கு செய்து கொண்டு இருக்கவேண்டும். இப்படி நினைத்தவன் போர்வையை நன்கு இழுத்து போர்த்துக் கொண்டு உறங்குவது போல் பாசாங்கு செய்து கொண்டு இருந்தான்.

'சரக் சரக்' என்னும் காலடிச் சத்தம் வரவர அதிகரித்துக் கொண்டே இருந்தது.


(தொடரும்)

# முயல் குட்டி

காட்டுப்புதூர் என்ற ஊரில் தோட்டக்காரர் ஒருவர் இருந்தார். அவர் வீட்டின் பின்புறம் ஏராளமான காய்கறிச் செடிகளைப் பயிரிட்டு வந்தார். வெண்டை, கத்தரி, முட்டைக்கோஸ், கெரட், முள்ளங்கி என்று ஏராளமான காய்கறிகள் அங்கு இருந்தன. அந்த தோட்டத்தில் ஒரு முயல் அலைந்து திரிந்தது.

அது தினமும் இரவிலும் பகலிலும் வந்து காய்கறிகளை உண்ண ஆரம்பித்தது. இதனால், தோட்டக்காரர் மிகுந்த சங்கடப்பட்டார். தன் தோட்டம் அந்த குட்டி முயலால் நாசப்படுத்தப்படுவதாக நினைத்தார். எவ்வளவோ முயன்றும் அவரால் அந்த முயலைப் பிடிக்க முடியவில்லை. பிறகு வனத்துறையினரிடம் புகார் கொடுக்கத் தீர்மானித்தார். அதன்படி, உடனே புறப்பட்டார். முயலின் தொல்லையைப் பற்றி புகார் கொடுத்தார்.

''ஒரு முயலுக்காக நீங்கள் இவ்வளவு சிரமப்படுவது கூடாது. இனி அந்த முயலை விரட்டுவது எங்கள் பொறுப்பு. கவலையை விடுங்கள். நாளை வந்து அந்த முயலைப் பிடித்து விடுகிறோம்'' என்றார் வனத்துறை



அதிகாரி. சொன்னபடியே... வனத்துறை அதிகாரி மறுநாள் காலையில் தோட்டக்காரர் வீட்டிற்குச் சென்றார்.அவரோடு சில வேலைக்காரர்களும் சென்றனர். தோட்டக்காரர் அவர்களை வரவேற்றார்.அனைவருக்கும் தேனீர்விருந்தளித்தார்.

பின்பு வனத்துறை அதிகாரி தோட்டத்திற்குள் சென்று பார்த்தார். ஒரு சிறிய புதருக்குப் பின்னால் அந்தக் குட்டி முயல் அமர்ந்திருந்து முட்டைக்கோசின் இலைகளை தின்று கொண்டிருந்தது. வனத்துறை அதிகாரியும் வேலைக்காரர்களும் அதனைப் பிடிக்க முயன்றனர். அது ஒரே தாவாகத் தாவியது. இதனால், வேலிக்கு அருகில் அவர்கள் அங்குமிங்கும் ஓடினார்கள். தடியினால் நிலத்தில் தட்டி முயலைப் பயமுறுத்தினார்கள். பயங்கரக் கூச்சலுடன் குறுக்கும் நெடுக்குமாய் பாய்ந்தனர். ஆனால், முயல் அவர்களிடம் சிக்காமல் தப்பிவிட்டது. சோர்ந்து போன வனத்துறை அதிகாரியும் அவர் வேலைக்காரர்களும் பெருமூச்சுடன் திரும்பினர்.

அப்போது அவர்கள் காய்கறிகளை ஆளுக்கொன்றாக பறித்துக் கொண்டனர். வனத்துறை அதிகாரியின் செயலை தோட்டக்காரர் தடுக்க முடியுமா? எனவே, அவர் அமைதியாக இருந்தார்.

பின்னர் அவர்கள் எல்லோரும் சென்ற பின்னர் தோட்டக்காரர் சுற்றும் முற்றும் பார்த்தார். வனத்துறை அதிகாரியும் அவரது வேலைக்காரர்களும் ஓடியாடியதில் தோட்டம் மிதிபட்டு நாசமாகி இருந்தது. மிஞ்சியிருந்த சில காய்கறிகளையும் அவர்களே பறித்துக் கொண்டு போயினர். தோட்டக்காரர் தன் முட்டாள்தனத்தை எண்ணினார். ஆயிரம் முயல்கள் ஒன்றாய் வந்து தன் தோட்டத்தில் காய்கறிகளை சாப்பிட்டால் கூட இத்தனை நாசம் ஏற்பட்டிராது என்று அவருக்குப் புரிந்தது. சாதாரண சின்ன விஷயத்தை பெரிது படுத்தியதால் தனக்கு ஏற்பட்ட நஷ்டத்தை எண்ணினார்.

சிறுநஷ்டம் வருகிறதே என்று பெரிய பெரிய தடுப்பு முயற்சிகளை திடீரென்று செய்வதால் பெரும் நஷ்டம் கூட சில நேரங்களில் ஏற்படலாம். எதையும் பொறுமையோடு சிந்தித்துச் செய்யவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'செஸ்' போட்டியில் இன்னுமொரு 'ஆனந்தன்'

## 12 வயது மாணவனின் சாதனை



தமிழ் நாட்டின் புதுச்சேரியைச் சேர்ந்த 12 வயது மாணவன் ஒருவன் ஒரே சமயத்தில் 200 பேருடன் செஸ் போட்டியில் கலந்து கொண்டு 189 போட்டியாளர்களை வெற்றி கொண்டு சாதனை படைத்துள்ளார்.

மொஹமட் ஜாவிட் என்ற இந்த மாணவன் ஏழாம் வகுப்பில் கல்வி கற்று வருகின்றார். 'செஸ்' விளையாட்டில் அதீத திறமை கொண்ட இவர் ஒரே தரத்தில் 200 மாணவர்கள் கலந்து கொள்ளும் 'மெகா செஸ்' போட்டியொன்றில் கலந்துகொண்டார்.

5 வயது தொடக்கம் 14 வரை வயதைக் கொண்ட மாணவர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொண்டனர். 11 மணிக்கு போட்டி ஆரம்பமாகியதையடுத்து ஒவ்வொரு போட்டியாளருடனும் ஜாவிட் மிகவும் நிதானமாகவும் கூர்மையாகவும் நொடிப் பொழுதுகளில் காய்களை நகர்த்தி ஒவ்வொரு வீரரையும் வெற்றி கொண்டார்.

மேற்படி, போட்டி இரவு 7 மணிக்கு முடிவுற்றபோது, 200 போட்டியாளர்களில் 189 போட்டியாளர்களை தோற்கடித்திருந்த ஜாவிட், ஐந்து போட்டியாளர்களிடம் மாத்திரமே தோல்வியுற்றார். ஆறு போட்டியாளர்களுடன் போட்டியை சமன் செய்தார். ஆக, இன்னுமொரு விஸ்வநாதன் ஆனந்தன் தயாராகி வருகின்றார் என்று கூறலாம் அல்லவா?

## வருடத்தின் சிறந்த மெய்வல்லுனர் போட்டியாளர்கள்

சர்வதேச மெய்வல்லுனர் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட 2008 ஆம் ஆண்டிற்கான சிறந்த மெய்வல்லுனர் விருது விழாவில் வருடத்தின் சிறந்த மெய்வல்லுனர் வீரராக ஜெமெய்க்காவைச் சேர்ந்த உசேன் போல்டும் சிறந்த வீராங்கனையாக கோல் ஊன்றிப் பாய்தல் வீராங்கனையான யெலெனா இஸின்பெஸ்வாவும் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.



சீனாவின் பீஜிங் நகரில் நடைபெற்ற 29 ஆவது ஒலிம்பிக் போட்டியில் 100, 200, 100x4 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் 'உலக சாதனைகளுடன் தங்கப் பதக்கங்களை வென்ற 22 வயதாகின்ற உசேன் போல்ட் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



இதே ஒலிம்பிக் போட்டியில் கோல் ஊன்றிப் பாய்தல் போட்டி மகளிர் பிரிவில் உலக சாதனையுடன் தங்கப் பதக்கத்தையும் வென்றமைக்காகவே யெலெனா சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டார்.



## சானியா மிர்ஸா

## தரவரிசையில் பின்னடைவு

இந்திய டென்னிஸ் நட்சத்திரமான சானியா மிர்ஸா இம்முறை உலக டென்னிஸ் தரப்படுத்தல் பட்டியலில் பின்னடைவை சந்தித்துள்ளார்.

இதன்படி, அவர் தர வரிசையில் 100 ஆவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளார். கை மணிக்கட்டில் ஏற்பட்ட காயத்தினால் பாதிக்கப்பட்டிருந்த சானியா மிர்ஸா இம்முறை ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து வெளியேறியதையடுத்து வேறு போட்டிகளிலும் பங்குபற்றவில்லை.

இந்த தற்காலிக ஓய்வின் காரணமாக புள்ளிகளைப் பெறக்கூடிய வாய்ப்புகளை இழந்தமையினால் சானியா மிர்ஸா இவ்வாறு தர வரிசையில் பின்னடைவை சந்தித்துள்ளார் என்றும் கருதப்படுகின்றது.


என்றாலும் அடுத்த வருடம் தொடக்கம் பழையபடி மீண்டும் புதுத் தெம்புடன் போட்டிக் களத்தில் குதிப்பதற்கு மிர்ஸா ஆயத்தமாகி வருகின்றார். எனவே, அடுத்த வருடம் தர வரிசையில் அவர் முன்னேற்றகரமான நிலைக்கு வருவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# ரெஸ்ட்லிங் மேனியா போட்டிகள் ஏப்ரலில்

உலக நாடுகள் பலவற்றில் பிரபல்யம் பெற்றுள்ள WWF ரெஸ்ட்லிங் போட்டிகளில் சிறந்த இடத்தை வகிக்கின்ற 'ரெஸ்ட்லிங் மேனியா' போட்டிகளின் 25 ஆம் வருட போட்டிகள் அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஃபுளோரிடாவில் நடைபெற்ற மேற்படி போட்டிகளைக் கண்டுகளிப்பதற்காக 73,000 ற்கும் மேற்பட்டவர்கள் வருகை தந்திருந்தனர். இம்முறை ஹூஸ்டனில் நடைபெறவுள்ள போட்டிகளுக்கு முன்னையதையும் விட அதிகமான ரசிகர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்படி முக்கியமான 21 நாடுகளைச் சேர்ந்தவர்கள் இந்த போட்டிகளை பார்ப்பதற்கு வருவார் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.






போட்டிக்கான நுழைவுச் சீட்டுக்களின் விற்பனையும் தொடங்கிவிட்டது. 40 டொலர் தொடக்கம் 255 டொலர் வரை நுழைவுச் சீட்டுக்கள் விற்கப்படுகின்றன. ரெஸ்ட்லிங், போட்டி மேடைக்கு அருகாமையிலுள்ள பார்வையாளர்களுக்கான ஆசன நுழைவுச் சீட்டுக்கள் 755 டொலர்களுக்கு விற்பனையாகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இந்த விலை கொண்ட நுழைவுச் சீட்டினை வாங்குபவர்கள் போட்டி முடிவடைந்து செல்லும்போது தமது ஆசனங்களை தம்மோடு வீட்டிற்கு கொண்டு செல்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



புனித ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு அட்டாளைச்சேனை 'சுப்பர் சோனிக்' விளையாட்டுக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சிப் போட்டியில் கலந்து கொண்ட அட்டாளைச்சேனை தேசிய கல்லூரி அணி வீரர்களையும், 'சோபர்' விளையாட்டுக் கழக வீரர்களையும் படத்தில் காணலாம்.

*(தகவல்- A.R. ஸஹிர் அஹமட் : விஜய்-இளம் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாதத்தில்....




**வருடத்தின் இறுதிக் கட்டத்தை வந்தடைந்துள்ளோம். இன்றளவில் வருடத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரை சுற்றுச்சூழல் பற்றிய பூரண அறிவு உங்களுக்கு கிடைத்திருக்கும் என நம்புகின்றோம். டிசம்பர் மாதம் உலக மக்கள் அனைவரதும் கவனத்தை ஈர்த்திருக்கும் ஒரு மாதமாகும். அதற்கான பிரதான காரணம், அனைவரும் இனியொரு புதுவருடத்தை அடைந்து கொள்வதற்கான ஆயத்தங்களை மேற்கொள்கின்ற மாதமாக டிசம்பர் இருப்பதாகும்.**

'க்ரகரியன்' நாட்காட்டியில் இது பன்னிரெண்டாவது மாதம். 31 நாட்களைக் கொண்டமைந்த ஏழாவது மாதம். லத்தீன் மொழியில் 'டிசம்' (Decem) என்பது 'பத்து' என்று அர்த்தப்படுகின்றது. ரோமானிய நாட்காட்டியின்படி இது பத்தாவது மாதமாக விளங்குகின்றது.

தமிழ் வருடக்கணக்கில் 'மார்கழி' மாதம் என்று பெயர் பெற்றுள்ளது. சிங்கள வருடக்கணக்கில் இம்மாதத்திற்கு 'உந்துவப்' என பெயர் வழங்கப்பட்டுள்ளது. 'துல் ஹஜ்' என்று இஸ்லாமிய வருடக் கணிப்பில் அழைக்கப்படுகின்றது.

மதம் மற்றும் கலாசார ரீதியில் கிறிஸ்தவர்களுக்கு மிகவும் முக்கியமானதொரு மாதமாகும். இம் மாதத்தின் 25 ஆம் தினத்தன்று யேசு நாதரின் பிறப்பினையிட்டு உலகவாழ் கிறிஸ்தவர்களால் 'நத்தார் தினம்' கொண்டாடப்படுகின்றது. அவ்வாறே, இந்த வருடத்தில் இம்மாதம் 9 ஆம் திகதி இலங்கைவாழ் முஸ்லிம்கள் ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடவுள்ளனர். இலங்கையில் சிவனொளி பாதமலை யாத்திரையும் இம்மாதத்திலேயே மேற்கொள்ளப்படுகின்றது.







## ஏனைய விசேட தினங்கள்

01 ஆம் திகதி - உலக எய்ட்ஸ் தினம்.

02 ஆம் திகதி - சர்வதேச அடிமை ஒழிப்பு தினம்.

03 ஆம் திகதி - சர்வதேச ஊனமுற்றோர் தினம், கிருமிநாசினி எதிர்ப்பு தினம்.

07 ஆம் திகதி - சர்வதேச சிவில் விமான சேவை தினம்.

10 ஆம் திகதி - மனித உரிமைகள் தினம், நொபெல் தினம்.

இம்மாதத்திற்குரிய மலராக 'ஹொலி'மலரும் டெஃப்ஃபொடில் (**daffodil**) எனும் மலரும் குறிப்பிடப்படுகின்றன. வைடூரியம், புஷ்பராகம் போன்றன அதிர்ஷ்டக் கற்களாகக் கொள்ளப்படுகின்றன.

## வன விலங்குகள் அவதானிப்பு

இலங்கையில் அழகிய பறவையாக இனங்காணப்பட்டுள்ள மயில் முட்டையிடுவதற்குத் தொடங்கும் மாதம் இதுவாகும். அத்துடன், ஆண் மயில்களின் தோகை வளரும் காலமும் இதுவே.

ஆண் மயில்கள் தமது தோகைகளை விரித்து அழகாக நடனமாடுவதை இக்காலப்பகுதியில் அதிகம் காணக்கூடியதாக இருப்பதோடு, அவை அகவுவதையும் கேட்கலாம்.

மழைவீழ்ச்சி இல்லாத பிரதேசங்களில் ஆறு, குளம், ஓடைகளில் நன்னீர் மீனினங்களையும் பாலூட்டி விலங்குகளையும் அதிகளவில் காணலாம்.

## காலநிலை அவதானிப்பு

கிழக்கு, ஊவா, வடக்கு, வட மத்திய மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை, மாத்தளை போன்ற பிரதேசங்களிலும் விட்டு விட்டு மழை பெய்யும். பொதுவாக சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களில் இடியுடன் கூடிய மழைவீழ்ச்சி கிடைக்கும்.

## உடுத்தொகுதி அவதானிப்பு

இரவு 8.00 மணியளவில் மகரம், கும்பம், மீனம், மேஷம், விருட்சிகம் ஆகிய உடுத்தொகுதிகளையும் அதிகாலை 4.00 மணியளவில் மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, சிலுவை நட்சத்திரம் போன்ற உடுத்தொகுதிகளையும் அவதானிக்கலாம்.

-ஜீநு







## பூத்துக் குலுங்கி காய்க்கும் மரங்கள்

**பூக்கள்**

- சல் - *Couroupita surinamensis*
- செம்மல்லிகை - *Murraya paniculata*
- ஹொலி - *Ilex*
- டெஃப்ஃபொடில் - *Narcissus*
- காட்டுக் கராம்பு - *Syzygium feruson*

**பழங்கள்**

- மா - *Mangifera indica*
- அன்னாசி - *Ananas comosus*
- லாவுல் - *Pouteria campechiana*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 182 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி: 01 | போட்டி: 02 | போட்டி: 03 | போட்டி: 04 | போட்டி: 05 (குறு.போ-193) |
|---|---|---|---|---|
| ஏ.அல்மாஸ், தரம் - 2^B, அல்-பதுரியா மு.வித்., கஹட்டோவிட்ட. | பி.தனுசன், தரம் - 6^D, ஹைலன்ட்ஸ் ம.கல்., ஹட்டன். | ஸாமில் ஹமீட், தரம் - 12^B கலை, கெகுணகொல்ல தே.பாட., கெகுணகொல்ல. | எம்.ஹுசைன், தரம் - 8^A, ஸாஹிரா கல்., தர்கா நகர். | எஸ்.ஹனிஸ்டா, தரம் - 9, குட்ரெஸ்ட் கொன்வன்ட், நுவரெலியா. |

### சரி/பிழை கூறுக 4

1. முன்னாள் பிரித்தானியப் பிரதமரான மாக்ரட் தச்சர் 'இரும்புச் சீமாட்டி' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார். ( )
2. தற்போதைய மியன்மார் நாட்டின் பழைய பெயர் கொன்ஸ்தாந்திநோபில் என்பதாகும். ( )
3. ஐக்கிய அமெரிக்காவால் அங்கு குடியேற விரும்பும் ஏனைய நாட்டவர்களுக்காக Green Card சீட்டிழுப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. ( )
4. A-1 எனும் குறியீடு கண்டி-கொழும்பு போக்குவரத்து மார்க்கத்தைக் குறிக்கின்றது. ( )
5. முன்னிலை வகிக்கும் டெனிஸ் வீராங்கனைகளில் ஒருவரான மரியா ஷரபோவா போட்டிகளில் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தியே விளையாடுகிறார். ( )

### அறிவுக்கு விருந்து - 182 விடைகள்


**போட்டி: 03**

(1) b (4) b
(2) c (5) a
(3) a

**போட்டி: 04**

a) 10 கிலோ 500 கிராம்
b) 39 பழங்கள்
c) காந்தன்

### வழி காட்டுங்கள் 2






**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2008.12.10 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 185**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

### வரைபடம் குறிக்கும் நாட்டின் பெயரில் கோடிடுக 3

a)



1. துருக்கி
2. வியட்நாம்
3. மோல்டோவா

b)



1. சிங்கப்பூர்
2. போலந்து
3. பொஸ்னியா

c)




1. இஸ்ரேல்
2. ஜோர்தான்
3. குவைத்

d)




1. பெல்ஜியம்
2. பூட்டான்
3. நேபாளம்


### ஒரே மாதிரியான உருக்களில் √ அடையாளமிடுங்கள் 1



### அன்பு தம்பி, தங்கைகளே! இது உங்கள் கவனத்துக்கு....

அற்லஸ் அறிவுக்கு விருந்து போட்டிகளில் ஆர்வத்துடன் பங்குபற்றும் உங்களுக்கு எமது நன்றிகள். நீங்கள் தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருக்கும் தபாலட்டைகள் போட்டிகளில் கலந்து கொள்வதில் உங்களுக்கு இருக்கின்ற ஆர்வத்தை எமக்கு தெளிவாகக் காட்டுகின்றது. தொடர்ந்து போட்டிகளில் கலந்து கொள்ளுங்கள். பரிசில்களை வெல்லுங்கள். அத்துடன், இதுவரை வெற்றியாளர்களாகத் தெரிவாகாதவர்கள் நீங்கள் எதிர்பாராத நிலையில் வெற்றியாளர்கள் ஆகலாம். எனவே, போட்டிகளுக்கு உங்கள் விடைகளைத் தொடர்ந்து அனுப்புங்கள். அதேவேளை, போட்டிகளில் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவாகி, இதுவரை தமக்குரிய பரிசினைப் பெறாதவர்கள் இருப்பின், பத்திரிகையில் பிரசுரமானவாறு **உங்கள் பெயர், கல்வி கற்கும் தரம், பாடசாலையின் பெயர், வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம்** என்பனவற்றுடன் நீங்கள் கலந்து கொண்டு **வெற்றியீட்டிய போட்டி இலக்கம், பிரசுரமான திகதி** என்பனவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டுக் கடிதமொன்றை **விஜய், அறிவுக்கு விருந்து, (முறைப்பாடு) த.பெ இல: 2037, கொழும்பு** என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். இதுவரை பரிசில்களைப் பெறாதவர்களுக்கு விரைவில் தங்களுக்குரிய பரிசில்களை அனுப்பி வைக்க இது எமக்கு உதவியாக இருக்கும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல.196 5



**மேலிருந்து கீழ்**

01. இயல், இசை, நாடகம் என்பனவற்றைக் குறிக்கும்.
02. இன்றளவில் உலகின் உயரமான கட்டடம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் இடம்.
03. உயிர் என்றும் பொருள்படும்.
05. கௌரவப்பட்டம் ஒன்று.
07. '............ வெற்றியின் முதற்படி' என்பர்.
08. விலங்குகளைப் பிடிப்பதற்காக பயன்படுத்தப்படும் சாதனம் இவ்வாறு அழைக்கப்படுகின்றது.

**இடமிருந்து வலம்**

01. மலை உச்சி.
03. சமுத்திரத்திலுள்ள ஆழமான பகுதி.
04. யானை செலுத்துபவன்.
06. திபெத் நாட்டின் ஆன்மீகத் தலைவர்.
08. ஒரு பொருளை உள்ளே வைத்து சுற்றிக் கட்டப்பட்டதை இவ்வாறு அழைப்பர்.
09. ஆட்டின் பெண் இனம்.
10. பிரபஞ்சத்தில் உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற கிரகம்.

### குறுக்கெழுத்துப்போட்டி 193 விடைகள்

| மேலிருந்து கீழ் | இடமிருந்து வலம் |
|---|---|
| 01. தாகசாந்தி | 01. தாமதம் |
| 02. மழலை | 05. கழனி |
| 03. தனி | 06. விலை |
| 04. தலைவி | 07. சாலை |
| 06. விதவை | 08. பதவி |
| 08. பலகை | 09. சலவை |
| 09. சக்கை | 10. திருக்கை |
| 11. ருசி | 13. சிகை |
| 12. டொலி | 14. சிலி |

**குறுக்கெழுத்துப் போட்டி -196**
**"விஜய்" த.பெ.எண். 2037**
**கொழும்பு**

### பாராட்டுப் பெறுவோர்

டி.மோஷிக்கா, தரம் - 8,
கருவாக்கேணி விக்னேஸ்வரா வித்., வாழைச்சேனை.

ஐ.பா.சிஜா, தரம் - 10^E,
அல்-மனார் ம.கல்., மருதமுனை.

நிமாஸ் லரீஃப், தரம் - 8^F,
அல்-அஸ்ஹர் மத்.கல்., திஹாரிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.





# வெள்ளை நிறத்திலான சிங்கம், புலிகள்









நியூஸிலாந்தைச் சேர்ந்த கிரேக் பஸ்ச் என்பவர் 'சிங்க மனிதர்' என்று அழைக்கப் படுகிறார். நியூஸிலாந்தின் வடகோடி நகர மான வாங்கரியில் உலகின் மிகப் பெரிய, சிங்கம்-புலி இனப்பெருக்கத் திட்டத்தை இவர் நடைமுறைப்படுத்தி வருகிறார். இங் குள்ள இவரது 'ஜியோன்' வனவிலங்குப் பூங்காவில் உலகில் அருகிவரும் மூன்று வகையான சிங்கம், புலி இனங்கள் உள்ளன. ஆபிரிக்காவில் அதிகளவில் காணப்படும் 'பார்பேரி' சிங்கம், வெள்ளைச் சிங்கம் ஆகிய இரண்டு இனங்களும் இந்தியாவில் இருக்கும் வங்காள வெள்ளைப் புலியும் இங்குள்ளன.

கிரேக்குக்கு சிறுவயது முதல் சிங்கங்கள், புலிகள் என்றால், மிகவும் பிரியம். தனது ஆர்வத்தின் காரணமாக சிங்கம், புலிகளுக் கான சரணாலயமொன்றை ஐந்து வருடங் களுக்கு முன்னர் உருவாக்கத் தொடங்கி னார். இந்த சரணாலயத்தில் 13 'பார்பேரி' சிங்கங்கள் உள்ளன. இவற் றின் பூர்வீகம் வட ஆபிரிக்காவாகும். அந்தப் பகுதியில் நிலவும் கடுங்குளி ரைச் சமாளிக்கும் வகையில் இவை கனமான உடம்பையும் வழக்கத்தை விட அடர்ந்த பிடரி முடியையும் கொண்டிருக்கின்றன. ஏனைய சிங்கங்களைபோலில்லாமல் இவற் றின் பிடரி முடி, உடம்பின் நடுப் பகுதி வரை நீண்டிருக்கும். கீழ்ப்பகுதி யிலும் வயிறு வரை காணப்படும். இது கருநிறத்தில் இருக்கும்.

இந்த இனத்தில் பெரிய சிங்கம் 2.6 மீற்றர் நீளமும், 250 கிலோ எடையும் இருக்கும். இவ்வகை வேட்டை விலங்குகள், முன்னைய காலத்தில் ரோமானியப் பேரரசர்களால், சிங் கங்கள், கைதிகள் நேருக்கு நேர் சண்டையி டும் கொடூரமான விளையாட்டுக்குப் பயன் படுத்தப்பட்டன. இன்று உலகில் மொத்தம் 250 'பார்பேரி' சிங்கங்கள் மட்டுமே உள்ளன.

வெண்ணிறத்தில் அடர்ந்த பிடரிமுடி, நீலநிறக் கண்கள் கொண்ட வெள்ளை நிறச் சிங்கங்களும் இச்சரணாலயத்தில் பார்வையா ளர்களைக் கவர்கின்றன. தெற்கு ஆபிரிக்கப் பகுதியைப் பூர்வீகமாகக் கொண்ட இந்த சிங்கங்கள், காடுகளில் தற்போது முழுமையாக அழிந்துவிட்டன. சரணாலயங்களில் மட்டுமே எஞ்சி யிருக்கின்றன. இயல்பாக இளம்பழுப்பு நிறமுடைய இவை, மரபணு மாற் றத்தால் இப்படி வெள்ளை நிறம் கொண்டு இருக்கின்றன. தென் ஆபி ரிக்காவில் இருந்து பரிமாற்றத் திட்டத் தின் கீழ் இந்தச் சிங்கங்களை கிரேக் பெற்றிருக்கிறார். இவை பெரிதாக வளர்ந்ததும் கிரேக் மீண்டும் ஆபிரிக் கக் காடுகளில் கொண்டு போய் விட்டுவிடுவாராம்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2008, டிசம்பர் மாதம் 03ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday December 03, 2008.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org